
# நமது செட்டிநாடு

மலர் 6 ✿ மணம் 08 ✿ ஸ்ரீ சார்வரி ஆண்டு ✿ மார்கழி ✿ டிசம்பர் 2020 ✿ ரூ.25
Namadhu Chettinad ✿ Volume 6 ✿ Issue 08 ✿ December 2020 ✿ Rs.25



செட்டி நாட்டரசர், பெரும் கொடையாளர்

# டாக்டர் எம்.ஏ.எம்.அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி



30-09-1931 - 02-12-2015

## என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்

மகன் : எம்.ஏ.எம்.ஆர்.முத்தையா (அய்யப்பன்)

மருமகள் : கீதா முத்தையா

பேத்திகள் : மெய்யம்மை முத்தையா
சிகப்பி முத்தையா

பேரன் : ராமசாமி முத்தையா

மற்றும்

செட்டிநாடு குழும நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள்

நமது செட்டிநாடு

**மலர் 6 மணம் 08 டிசம்பர் 2020**
**ஸ்ரீ சார்வரி ஆண்டு மார்கழி மாதம்**

*ஆசிரியர்* : ந.ஆவுடையப்பன்
*ஆசிரியர் குழு* :
புதுவயல் செல்லப்பன்
குழ.கதிரேசன்
ஆறாவயல் ஆர்எம்.சண்முகம்
முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி
விசாலாட்சி சுப்பிரமணியம்
*அலுவலக நிர்வாகம், சந்தா:*
எஸ்.குழந்தைவேலு
*தட்டச்சு*: முரு. மலர்விழி
*வடிவமைப்பு*: செ.ஜீவானந்தகுமார்
*விளம்பரம் தொடர்புக்கு* - 99622 43750

இணைய இதழ் முகவரி: www.namadhuchettinad.com
செய்திகள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

**நமது செட்டிநாடு** மாத இதழ்
ராணி சீதை அரங்கம், 3–வது தளம்,
603, அண்ணா சாலை, சென்னை - 600 006
தொலைபேசி: 044–46717755



கட்டுரைகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.



உறுப்பினர் சந்தா கட்டணம்

| | |
|---|---|
| ஓராண்டு | ரூ.250 |
| இரண்டாண்டு | ரூ.500 |
| ஐந்தாண்டு | ரூ.1250 |

(சந்தா செலுத்த, புதுப்பிக்க, விளம்பரம் செய்ய)

1) **கரு.மணிகண்டன், மக்கள் தொடர்பு அலுவலர்**
காரைக்குடி 86818 28284
2) திருமதி சி.கண்ணாத்தாள் சிந்தாமணி
மதுரை : 94423 27087
3) திருமதி கண. தேனம்மை
மதுரை : 94875 75896
4) திரு.கா.குமரப்பன்
மதுரை : 99521 02305 / 91711 99222
5) திரு.MR.பழம் நாச்சியப்பன்
சென்னை : 97899 55526
6) திருமதி அரு.வள்ளிக்கண்ணு
திருச்சி : 75982 15797 / 99654 24996
7) திரு. ஆர்எம். அழகப்பன்
கண்டரமாணிக்கம் : 98401 23931
8) திரு.விஆர்.பாலமுருகன்
கோவை : 97916 32421, 83000 51512
9) வி.வள்ளியம்மை
கோவை : 88706 52054
10) திரு. RM.பழனியப்பன்
சேலம் : 95855 55235 / 93621 22300
11) திரு. AL.தண்டாயுதபாணி
பெங்களூரு : 090368 62231

**மின்னஞ்சல்**
namadhuchettinad@gmail.com



நமது செட்டிநாடு
ராணி சீதை அரங்கம், 3–வது தளம்,
603, அண்ணா சாலை, சென்னை 600 006.


# அமெரிக்க இந்திய உறவு வலுப்பெற வேண்டும்

அமெரிக்க அதிபராக தேர்வு செய்யப்பட்டுள்ள ஜோ பிடன் ஆரவாரமில்லாமல் அமைதியாக அருஞ்செயல்கள் ஆற்றக் கூடியவர் எனப் பெயர் பெற்றவர். “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்பதற்கிணங்க அமெரிக்காவில் குடியேறி உள்ள, மற்றும் அமெரிக்காவிற்கு வருவதற்கு வாய்ப்புகள் உள்ள திறமைசாலிகளையும், அறிஞர்களையும் அறிந்து அவர்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்தும் விதமாக பல்வேறு திட்டங்களை தீட்டியிருக்கிறார்.

அமெரிக்காவில் சுமார் 1 கோடியே 10 லட்சம் வெளி நாட்டவருக்கு ஜோ பிடன் பதவி ஏற்றதும் அமெரிக்க குடியுரிமை வழங்க முன்னுரிமை வழங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விசா நடைமுறைகள் மற்றும் கிரீன் கார்டுகள் பெறுவதற்கு உள்ள கட்டுப்பாடுகளில் சீர்திருத்தம் செய்வது உட்பட பல சலுகைகளை அளிக்கவும் ஜோ பிடன் முடிவு செய்துள்ளார். கிரீன் கார்டு வழங்குவதற்கு ஒவ்வொரு நாட்டுக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள உச்சவரம்பு நீக்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறார். இதனால் அமெரிக்காவில் குடியுரிமை கேட்டு நீண்ட காலமாக காத்திருப்போர் குறிப்பாக இந்தியாவைச் சேர்ந்தவர்கள் பயன் பெறுவர்.

ஜோ பிடன் பதவி ஏற்றதும் கொரோனாவை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிப்பார் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதற்கான ஆலோசனைக் குழுவில் இந்திய வம்சாவளியினர் டாக்டர் விவேக் மூர்த்தியும். செலின்கவுண்டரும் இடம்பெற்றுள்ளனர். ஜோ பிடன் – கமலா ஹாரிஸ் புது நிர்வாகத்தில் இந்தியா – அமெரிக்க உறவு, பொருளாதாரம், வணிகம், மருத்துவம், கல்வி உள்ளிட்ட அனைத்து துறைகளும் இப்பொழுது இருப்பதை விட மேலும் சிறப்பாக வலுவடையும் என்று நம்பலாம். ராணுவ ரீதியாக இந்தியாவிற்கு அமெரிக்காவின் ஒத்துழைப்பின் மூலம், சீனா, பாகிஸ்தான் நாடுகள் எல்லை தாண்டிய தீவிரவாதத்தை தவிர்த்துக் கொள்ளும் என்றும் நம்பலாம்.

அமெரிக்காவின் இந்த ஆட்சி மாற்றம், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளான இந்தியா மற்றும் அமெரிக்கா உறவு வலுப்பெற்று உலகில் அமைதியும், சமாதானமும் தழைத்தோங்கி மக்கள் அனைவரும் நலமும் வளமும் பெற வேண்டும் என்பதே நமது எதிர்பார்ப்பு ஆகும்.




# உள்ளே...


ஆளுமையும் அதிகாரமும்
மிக்க அமெரிக்க அதிபர் தேர்தல் .............................. 06

‘பெலிசிடி ஃபேமிலி ஆபீசஸ்’!
நகரத்தார்களுக்கு உள்ளூரில் ஒரு ஏஜென்ட்........... 10

திருக்கைலாயம் திருவலம்............................................. 12

எண்ணத்தில் விவேகம்! செயலில் வேகம்!
இராம்குமார் சிங்காரத்துடன் நேர்காணல்................. 14

ஆரோக்கியம் தரும் அறுசுவை உணவு
உடல் நலத்திற்கேற்ற உணவு வழிகாட்டி ................. 17

தொழில் தொடங்கலாம் வாங்க ................................ 20

பத்திரிகையாளர் ஒக்கூர் சுந்தரம்.............................. 26

நகரத்தார் சிகரத்தார்...................................................... 28

பிஞ்சு ஓவியம்................................................................ 30

பன்னிரு ஆழ்வார்கள் ஓர் அறிமுகம் ........................ 31

மனம் பணம் மந்திரம் ............................................... 34

திருக்களர் ஆண்டவர் என்றும்
ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள்........................ 36

உங்கள் மூடு எப்படி? .................................................. 38


நேரத்தைப் பற்றிப் பேசும் திருக்குறள் ........................ 40

அறிவியல் அற்புதங்கள்................................................. 43

உறுப்பினர் சந்தா படிவம் ............................................ 46


**அட்டையில்...**

அமெரிக்க அதிபராக தேர்வு பெற்றுள்ள ஜோ பிடன், துணை அதிபராக தேர்வு பெற்றுள்ள கமலா ஹாரிஸ்



ஸ்ரீ அடைக்காத்தாள் பெரியகருப்பண்ண சாமி துணை
Vees Star™
Diamonds
& Jewelry
Trendy
Wedding Collections
on Display
Manufacturers, Wholesalers & Retailers
W-182, NORTH MAIN ROAD
ANNA NAGAR WEST EXTN., CHENNAI-600 101.
Ph: 044 4553 6003 | www.vstardiamonds.com
S. Vijayakumar
V. Vishalakshi
Pallathur







# ஆளுமையும் அதிகாரமும்

**கருத்தாக்கம் : கார்த்திகேயன் தியாகராஜன், டல்லஸ், அமெரிக்கா**

"தள்ளா விளையுளும் தக்காறும் தாழ்வு இலாச்
செல்வரும் சேர்வது நாடு"


என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க, எல்லா இயற்கை வளங்களும், செல்வச் செழிப்பும், அறிவியல் அறிஞர்களும் நிறைந்த அமெரிக்கா உலகின் வல்லரசு என்று அழைக்கப்படுகிறது. அந்த நாட்டின் அதிபராக உள்ளவர் உலக நாடுகள் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் மிக்கவர். அந்த நாட்டின் அதிபராவதற்கு சிறந்த திறமையும், ஆளுமையும், எல்லாவற்றிற்கும் மேலாக இறையருளும் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

அத்தகைய அதிபருக்கான தேர்தல்தான் 3.11.2020 அன்று நடந்தேறியிருக்கிறது. அங்கு அதிபர் தேர்தல் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது. அதிபர் தேர்தலில் போட்டியிடுபவர் அமெரிக்காவில் பிறந்தவராக, 35 வயது நிரம்பியவராக, அமெரிக்காவில் குறைந்தபட்சம் 14 ஆண்டுகள் வசித்தவராகவும் இருக்க வேண்டும். இதில் ஜனநாயகக் கட்சியை (Democratic Party) சார்ந்த 77 வயது நிரம்பிய ஜோசப் ராபினெட் பிடன் (Joseph Robinette Biden) என்ற ஜோ பிடன் 46-வது அமெரிக்க அதிபராகவும் தமிழகத்தை பூர்வீகமாகக் கொண்ட தாயின் வம்சாவழியைச் சார்ந்த 56 அகவை நிரம்பிய கமலா ஹாரிஸ் துணை அதிபராக தேர்வு செய்யப் பட்டிருக்கிறார்கள்.

### அமெரிக்க அதிபர் தேர்தல் முறை:

அமெரிக்க அதிபர் மற்றும் துணை அதிபர் Electorl College என்று அழைக்கப்படும் வாக்காளர் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஒரு மறைமுக (Indirect Election) தேர்தலாகும். ஒவ்வொரு மாநிலத்திற்கும், ஒரு வாக்காளர் குழு என்ற அடிப்படையில், மொத்தமுள்ள 50 மாநிலங்களுக்கும் 50 வாக்காளர் குழுக்கள் உள்ளன. ஒவ்வொரு மாநிலமும் அமெரிக்க காங்கிரசில் அம்மாநிலத்திற்கு உள்ள மேலவை (Senate) மற்றும் கீழவை (House of Representative) உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு சரிசமமாக வாக்காளர் குழுவிற்கான உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும். இந்தியாவில் பாராளுமன்ற, மாநில சட்டசபை உறுப்பினர்கள் ஒவ்வொரு மாநிலத்திற்கும் வேறுபடுவது போல. உதாரணமாக மிகப்பெரிய மாநிலமான கலிபோர்னியாவில் 55 வாக்காளர் குழு உறுப்பினர்களும், டெக்சாஸ் மாநிலத்தில் 38 உறுப்பினர்களும், மக்கள் தொகை குறைவாக உள்ள மாநிலமான அலாஸ்காவில் 3 உறுப்பினர்களும் உள்ளனர்.







# மிக்க அமெரிக்க அதிபர் தேர்தல்

**எழுத்தாக்கம்: நெற்குப்பை தியாகராஜன்**

அதிபருக்கு ஒவ்வொரு மாநிலத்திலும் மக்கள் நேரடியாக அளிக்கும் முன்னுரிமை வாக்குகள் என்று அழைக்கப்படும் Popular Vote அந்தந்த மாநில வாக்காளர் குழுவிற்கு செல்கிறது. அதில் எந்த கட்சியின் வேட்பாளர் அதிக Popular Vote பெற்றவரோ, அவருக்கு “Winner take all System” என்ற கொள்கையின்படி வாக்காளர் குழு ஓட்டு முழுவதும் கிடைத்துவிடும். உதாரணத்திற்கு கலிபோர்னியா மாநிலத்தில், ஜனநாயக கட்சி வேட்பாளர் 30 லட்சம் Popular ஓட்டும், குடியரசு கட்சி வேட்பாளர் 28 லட்சம் Popular ஓட்டும் பெற்றால், அந்த மாநிலத்தில் உள்ள Electoral College வாக்காளர் குழு 55 ஓட்டும் முழுமையாக ஜனநாயக கட்சி வேட்பாளருக்கே கிடைத்துவிடும். அமெரிக்காவில் மொத்தமுள்ள 50 மாநிலங்களிலும் 538 வாக்காளர் குழு ஓட்டுகள் உள்ளன. இதில் எந்த கட்சி வேட்பாளர், குறைந்தபட்சம் 270 வாக்காளர் குழு ஓட்டுக்களை பெறுகிறாரோ அவரே அதிபர் தேர்தலில் வெற்றியடைந்தவராக கருதப்படுவார்.

நடந்து முடிந்த இந்த தேர்தலில் ஜனநாயக கட்சியைச் சார்ந்த ஜோ பிடன் 306 வாக்காளர் குழு ஓட்டுகளும், குடியரசுக் கட்சியை சார்ந்த டொனால்டு டிரம்ப் 232 ஓட்டுகளும் பெற்றதால் ஜோ பிடன் வெற்றி பெற்றுவிட்டார். இந்த தேர்தலில் ஜோ பிடன் பெற்ற (Popular Vote) முன்னுரிமை வாக்குகள் 8.01 கோடி. டொனால்ட் டிரம்ப் பெற்ற (Popular Vote) முன்னுரிமை வாக்குகள் 7.39 கோடி. ஜோ பிடன் (Popular Vote) மற்றும் வாக்காளர் குழு (Electoral College Vote) இரண்டிலும் அதிக வாக்குகள் பெற்று வெற்றியடைந்து விட்டார்.

2016 அதிபர் தேர்தலில் ஹிலாரி கிளிண்டன் முன்னுரிமை வாக்குகள் (Popular Vote) அதிகம் பெற்றாலும், வாக்காளர் குழு வாக்குகள் டொனால்ட் ட்ரம்பை விட குறைவாக பெற்றதால் ஹிலாரி கிளிண்டன் வெற்றி பெற முடியவில்லை. வாக்காளர் குழு உறுப்பினர்கள் அவர்களது மாநில சட்டசபைகளில் கூடி அதிபர், துணை அதிபருக்கான வாக்குகளை அளிக்கின்றனர். இது சம்பந்தமான ஆவணங்கள் மத்தியில் உள்ள செனட் மற்றும் பிரதிநிதிகள் சபைக்கு அனுப்பப் பட்டு, செனட்டின் தலைவர் (தற்பொழுது உள்ள துணை அதிபர்) தேர்தலில் வெற்றி பெற்றவர்களை சட்டபூர்வமாக அறிவிப்பார். புதிதாக தேர்ந் தெடுக்கப்பட்ட அதிபர், துணை அதிபர் அடுத்த ஆண்டு ஜனவரி 20-ஆம் தேதி பதவி ஏற்க உள்ளார்கள்.

**அமெரிக்க அதிபர் தேர்தலில் முக்கியமான வித்தியாசங்கள்:**

1) அதிபர் தேர்தல் நடத்துவதற்கான உரிமை ஒவ்வொரு மாநிலத்திடமும் உள்ளது. ஒவ்வொரு

மாநிலத்திலும் அதன் Secretary of State – மாநில சட்டசபை செயலாளர், தேர்தல் முடிவுகளை அறிவிப்பார். நாடு முழுவதற்குமான தேர்தல் ஆணையம் அமெரிக்காவில் இல்லை.

2) Early Voting என்று சொல்லப்படுகின்ற, தேர்தல் நாளுக்கு 3 அல்லது 4 வாரங்களுக்கு முன்கூட்டியே மக்கள் ஓட்டுச் சாவடிக்கு சென்று வாக்களிக் கின்ற வசதி உள்ளது.

3) அரசுப் பணியில் உள்ளவர்கள் மற்றும் சாதாரண பொது மக்களும் தபால் மூலம் வாக்களிக்கலாம். இந்த கொரோனா பெருந்தொற்று காலத்தில் மக்கள் பாதுகாப்பாக வாக்களிப்பதற்கு இது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இந்ததேர்தலில் சுமார் 7 கோடி மக்கள் தபால் மூலம் வாக்களித்திருக்கிறார்கள்.

4) தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் நேருக்கு நேர் தங்களின் கருத்துக்களையும், மக்களுக்கு தாங்கள் ஆற்றப் போகும் பணிகளைப் பற்றியும் விவாதம் நடத்துவார்கள். நாடு முழுவதிலும் உள்ள மக்கள் இதை தொலைக்காட்சி மூலம் பார்த்து, யார் தகுதியான, திறமையான செயல்பாடுடைய அதிபராக இருப்பார் என்று தீர்மானித்து அதன் அடிப்படையில் வாக்களிக்கலாம். பொதுவாக மூன்று முறை அதிபர் வேட்பாளர்கள் இந்த நேருக்கு நேர் விவாதம் நடத்துவார்கள். இந்த முறை டொனால்ட் டிரம்ப் கொரோனாவால் சிறிது பாதிக்கப்பட்டதால் இரண்டு முறை மட்டுமே விவாதம் நடைபெற்றது.

5) Popular Vote எனப்படும், மக்கள் நேரடியாக அளிக்கும் வாக்குகளை விட வாக்காளர் குழு வாக்குகளே வேட்பாளரின் வெற்றி தோல்வியை தீர்மானிக்கின்றன.

6) தேர்தலில் தோல்வியடைந்த வேட்பாளர் வெற்றி பெற்றவருக்கு வாழ்த்துக்கூறி, தன் தோல்வியை பகிரங்கமாக ஒப்புக்கொள்வார். ஆனால் இந்தத் தேர்தலில் தற்போதைய அதிபர் டொனால்ட் டிரம்ப் தன் தோல்வியை ஒப்புக் கொள்ளாமல் தேர்தலில் மோசடிகள் செய்து ஜோ பிடன் வெற்றியடைந்ததாக கூறி இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்குகள் கூட தொடர்ந்து அதிலும் வெற்றி பெற முடியவில்லை.



கமலா ஹாரிஸ்

7) ஒவ்வொரு கட்சியிலும் அதிபர் பதவிக்கு போட்டியிட நினைப்பவர், அந்த கட்சிக்குள்ளே நடைபெறும் பிரைமரி (Primary) தேர்தலில் வெற்றி பெற்று, அந்த கட்சியின் தேசிய மாநாட்டில் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிக்கப் படுவார். இந்த அதிபர் தேர்தலுக்கு ஜனநாயகக் கட்சியின் சார்பில் ஜோ பிடனும் கமலா ஹாரிசும் போட்டியிட்டதில், ஜோ பிடன் அதிபர் வேட்பாளராக வெற்றி பெற்றார். ஜோ பிடன் அதிபர் வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின், கமலா ஹாரிசை தனது துணை அதிபர் வேட்பாளராக அறிவித்தார். இந்த தேர்தலில் வாக்களிக்க தகுதியான 24 கோடி அமெரிக்க மக்களில் சுமார் 15 கோடிப் பேர் வாக்களித்துள்ளார்கள். அமெரிக்க தேர்தல் வரலாற்றில் 120 ஆண்டுகளுக்கு பின் தற்போதைய தேர்தலில்தான் 64.5 சதவிகித ஓட்டுகள் பதிவாகின.

அமெரிக்காவில் வசிக்கும் சுமார் 40 லட்சம் இந்திய மக்களில் சுமார் 25 லட்சம் மக்கள் வாக்களிக்க தகுதியானவர்கள்.

**ஜோ பிடன்:**

ஜோ பிடனுக்கு வாலிப வயது வரை பேசுவதில் குறைபாடு இருந்தது. (திக்கிப் பேசுதல்) கடுமையான பயிற்சி மூலம் அதைச் சரி செய்தார்.

அவரின் 30-ஆவது வயதில் ஒரு விபத்தில் இவரது மனைவி, மகள் பலியானார்கள். இரண்டு மகன்களும் காயமடைந்தனர். 5 ஆண்டுகளுக்கு முன்பு இவரது மகன் புற்று நோயால் காலமானார். 1988-ல் அதிபர் தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளர்களில் ஒருவராக இருந்தார். ஆனால் இறுதி பட்டியலில் இவர் தேர்வாகவில்லை. 1988-ம் ஆண்டு தீவிர கழுத்துவலி பிரச்சனையால் மூளையில் அறுவைச் சிகிச்சை (ஆபரேஷன்) செய்து கொண்டார். 2008-ஆம் ஆண்டு அதிபர் தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளராக போட்டியிட்டார். ஆனால் ஒபாமா தேர்வானார். 2016-ஆம் ஆண்டு அதிபர் தேர்தலில் போட்டியிட இவர் விரும்பினார். ஆனால் ஹிலாரி கிளிண்டன்தான் சிறந்த தேர்வு என்று ஒபாமா இவரை தடுத்து விட்டார். ஜோ பிடன் டெலவர் மாகாணத்தில் இருந்து (1973 to 2009) ஏழு முறை அமெரிக்க செனட் சபைக்கு தேர்வானார். இளம் வயதில்

செனட் சபைக்கு தேர்வானவரில் ஜோ பிடனும் ஒருவர். செனட் உறுப்பினராக இருந்த போது டெலவரில் இருந்து வாஷிங்டனுக்கு ரயிலில் வந்து சென்றார். இவர் சிகரெட், மது குடிப்பதில்லை. ஒபாமா ஜனாதிபதியாக இருந்த (2008 to 2016) இரண்டு முறையும் துணை ஜனாதிபதியாக பதவி வகித்தார். அமெரிக்காவின் உயர் பதவிக்கு உயரவேண்டும் என்ற இவரின் அரை நூற்றாண்டு கனவு, எண்ணற்ற இடையூறுகளைத் தாண்டி இப்பொழுது நிறைவேறியிருக்கிறது. அமெரிக்க அதிபர்களிலே மிக அதிக வயதுடையவர் ஜோ பிடன்தான். மிகுந்த அரசியல் அனுபவம், சிறந்த நிர்வாகத் திறனும் உடைய ஜோ பிடன் அமெரிக்காவை மென்மேலும் உயர்ந்த, சிறந்த நிலைக்கு கொண்டு செல்வார் என்ற நம்பிக்கை அமெரிக்க மக்களிடம் இருக்கிறது.

### கமலா ஹாரிஸ்:

அமெரிக்க துணை அதிபராக தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிற கமலா ஹாரிஸ் மூன்று விதமான பெருமைகள் உடையவராக உள்ளார். முதலாவது அமெரிக்க வரலாற்றிலேயே மிக உயரிய பதவிக்கு தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிற முதல் பெண்மணி, முதல் ஆசியன் - அமெரிக்கன் மற்றும் முதல் ஆப்பிரிக்கன். அமெரிக்கன் ஆவார் புற்றுநோய் விஞ்ஞானியான இவரின் தாய் சியாமளா கோபாலன், தமிழ்நாட்டில் மன்னார்குடிக்கு அருகில் உள்ள துளசேந்திர புரத்தைச் சார்ந்தவர். கமலாவின் தந்தை டொனால்டு ஹாரிஸ் ஜமைக்கா நாட்டைச் சார்ந்தவர். இவருடைய தாய் சியாமளா கோபாலன் தனது 19 வயதில் மேற்படிப்பிற்காக அமெரிக்காவிற்குச் சென்று அங்கு அவருடன் பல்கலைக் கழகத்தில் படித்த டொனால்டு ஹாரிசை காதல் திருமணம் செய்துகொண்டார். ஆனால், சிறிது காலத்திலேயே கமலாவின் தாயும் தந்தையும் விவாகரத்து பெற்று பிரிந்த பின்பு, கமலாவும் அவரது சகோதரி மாயா ஹாரிசும் தாயால் வளர்க்கப்பட்டனர். தாய் மற்றும் சகோதரியுடன் கனடாவின் மான்ட்ரீல் நகருக்கு கமலா ஹாரிஸ் சென்றார். பின்பு அமெரிக்கா திரும்பிய கமலா 1986 ஆம் ஆண்டு ஹார்வர்டு (Harvard) பல்கலைக் கழகத்தில் பி.ஏ.அரசியல் அறிவியல், பொருளாதாரம் படித்தார். பின்பு 1990-ல் சட்டப்படிப்பை முடித்தார். இரண்டு கவுரவ டாக்டர் பட்டமும் பெற்றார். தனது தாய் வழித் தாத்தாவான வி.டி.கோபாலனை சந்திக்க சென்னைக்கு அடிக்கடி வந்துள்ளார். பெசன்ட் நகர் கடற்கரையில் தாத்தாவுடன் நடந்து சென்ற அனுபவங்கள் பசுமையாக இருப்பதாக பலமுறை இவர் குறிப்பிட்டுள்ளார்.

சான்பிரான்சிஸ்கோ மாவட்ட அட்டர்னியாக இரண்டு முறை பணியாற்றிய பின்னர் 2011-ல் கலிபோர்னியா மாநில அட்டர்னி ஜெனரலாக தேர்வு பெற்றார். கலிபோர்னியாவின் முதல் பெண் அட்டர்னி ஜெனரல், அமெரிக்க செனட்டிற்கு தேர்வு செய்யப்பட்ட முதல் தெற்காசியப் பெண் என்ற பெருமையும் இவருக்குண்டு.

கமலா ஹாரிஸ், ஹார்வர்டு பல்கலைக்கழக வாழ்க்கை தன்னை செதுக்கியதாக சிலாகித்துச் சொல் கிறார். நிறத்தினாலோ அல்லது பின்புலத்தினாலோ ஒருவர் அரசியல் வாதியாகக் கூடாது என்ற சித்தாந் தத்தில் ஊறித் திளைத்தவராக இருக்கிறார். என்னுடைய செயல்பாடுகளின் மூலம் என்னை மதிப்பிட வேண்டும் என்று கூறுகிறார். துணை அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றதால் 2024 அதிபர் தேர்தலில் பங்கு பெறுவதற்கான வாய்ப்பு கமலாவிற்கு கனிந்து வரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஜனநாயகக் கட்சியின் எதிர்காலத்திற்கான ஒரு வலுவான சக்தியாக நம்பப்படும். கமலா, தனது ஆழ்ந்த வேர்களை சமூக சேவை களின் மூலமாகவும்,சிறந்த கல்வியின் மூலமாகவும் கிளை பரப்பியிருக்கிறார்.

புதிய அமெரிக்க அரசின் வெளியுறவு கொள்கை உலக நாடுகளுக்கும் குறிப்பாக இந்தியாவிற்கும் தலையங் கத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பல வழிகளில் சாதகமாக அமையும் என்று எதிர்பார்க்கலாம்.



# ‘பெலிசிடி ஃபேமிலி ஆபீசஸ்’!

## நகரத்தார்களுக்கு உள்ளூரில் ஒரு ஏஜென்ட்

அந்தக் காலத்தில் அயல்நாட்டில் கொண்டு விற்கப்போன தனவணிகர்களுக்கு, இங்கே சொந்த ஊரில் வீடு மற்றும் வயல், காடு, கரை கணக்குகளையும், மற்ற வெளி விஷயங்களையும் நிர்வகிக்க ஆச்சிக்கு துணையாக ஒரு ஏஜென்ட் கட்டாயம் இருப்பார். அவரிடம் பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டு, குடும்பத் தலைவர் வெளிநாட்டில் நிம்மதியாக தொழிலில் கவனம் செலுத்தலாம்.

ஆனால் இப்போது பல குடும்பங்களில் ஏஜென்ட் காணாமல் போய்விட்டார். வாழ்க்கை முறை மாற்றங்களும் கால மாற்றங்களும் பல விஷயங்களுக்கு மாற்று ஏற்பாடுகளைக் கொண்டு வந்துவிட்டன. அந்த வரிசையில் ஏஜென்ட் கான்செப்டுக்கு மாற்றாக வந்திருப்பவைதான் ஃபேமிலி ஆபீஸ் நிறுவனங்கள்.



சுப.ராஜகோபால்

நாட்டரசன்கோட்டையைச் சேர்ந்த VKN. கண்ணப்பன், தேவகோட்டையைச் சேர்ந்த VR.சுந்தரம், நடராஜபுரத்தைச் சேர்ந்த OL. சுப்பிரமணியன் ஆகியோர்கள் சென்னையில் தொடங்கி இருக்கும் ‘ஃபெலிசிடி ஃபேமிலி ஆபீசஸ்’ என்னும் நிறுவனமும் அந்த வகையைச் சேர்ந்ததே!

சொந்த ஊரில் குடும்பத்தையும் சொத்துக் களையும் விட்டுவிட்டு, வேலை நிமித்தம் வெளிநாடு அல்லது வெளியூர் சென்று அங்கேயே செட்டிலாகி இருக்கும் நகரத்தார்களின் சொத்துக்களை நிர்வகிப்பது மட்டுமல்ல இன்னும் பல சேவைகளையும் வழங்குகிறது இந்த நிறுவனம். இது குறித்து அந்த நிறுவனத்தின் தலைவர் நாட்டரசன் கோட்டை KN. ராக்கப்பன் என்ற SP. ராஜகோபாலிடம் பேசினேன்.

‘‘நான் மதுரை வங்கியில் பணியாற்றி, ஐசிஐசிஐ வங்கியில் இணைந்த பிறகும் பணியில் தொடர்ந்து கடந்த மார்ச் மாதம் ஓய்வு பெற்றேன். வங்கியில் வேலைசெய்யும்போதே, அயல்நாடுகளில் இருக்கும் வாடிக்கையாளர்களிடம் அதிகம் தொடர்பில் இருப்பேன். அடிக்கடி பேசுவேன். இதனால் சொந்த நாட்டில் அவர்களுக்கான தேவைகள் பற்றி நன்கு தெரிந்து கொள்ள முடிந்தது. என்னிடம் அவர்கள் அடிக்கடி சொத்து நிர்வாகத்துக்கு உதவும் நிறுவனங்கள் குறித்துக் கேட்பார்கள். நானே அவர்களுக்கு சில ஆலோசகர்களை பரிந்துரை செய்துள்ளேன். பணி ஓய்வுக்குப் பிறகு இந்த சேவைகளைக் கொண்ட ‘ஃபெலிசிடி ஃபேமிலி ஆபீசஸ்’ நிறுவனத்தில் சேர்ந்தேன்.

அதன் பின்னர், சொத்துக்களை இங்கே விட்டு விட்டு வெளிநாடுகளில் / வெளியூர்களில் தங்கி யிருப்போர் சந்திக்கும் பிரச்னைகள் என்ன, அவர்களின் தேவைகள் என்ன, எந்த மாதிரியான சேவைகள் அவர்களுக்குத் தேவைப்படும் என்று எங்கள் நிறுவனர்கள் ஆலோசித்து அந்தச் சேவைகளை அளிக்கும் ஒரு நிறுவனமாக ‘ஃபெலிசிடி ஃபேமிலி ஆபீசஸ்’ நிறுவனத்தைத் தொடங்கிய தற்கான காரணங்களை விவரித்தார்.

* முதல் காரணம், நம் ஊர் பக்கம் பல பெரிய வீடுகள் பராமரிப்பு இல்லாமல் இடிந்து போய் கிடக்கின்றன. அவற்றின் உரிமையாளர்களுக்குள் நல்ல புரிதல் இல்லாமலோ அல்லது பழுது பார்த்துப் பராமரிக்கப் போதிய பணவசதி இல்லாமலோ அவ்வீடுகளை அப்படியே போட்டு வைத்திருக்கிறார்கள். அந்த மாதிரிவீடுகளைப் பராமரிக்க வரவேண்டும்.

* இரண்டாவது, முன்பெல்லாம் நம் ஊர்களில் நந்தவனம், வேத பாடசாலை, பசுமடம் போன்றவை நிறைய இருந்தன. பின்னாட்களில் அவற்றையெல்லாம் பராமரிக்க சரியான ஆள் இல்லாமல் போகவே, இப்போ தெல்லாம் அவற்றைப் போன்ற தர்ம ஸ்தாபனங்கள் குறைந்துவிட்டன. மீண்டும் அவற்றுக்கெல்லாம் புத்துயிர் கொடுத்து, அவற்றைப் பராமரிக்க ஒரு அறக்கட்டளை தொடங்கி, எல்லாவற்றையும் நடை முறைக்குக் கொண்டு வரவேண்டும்.

* மூன்றாவதாக, அயல்நாட்டில் பொருளீட்டும் நம்மவர்களின் வருமானத்தில் ஒரு பகுதியைச் சேமித்து, இங்கே முதலீடு செய்து, அப்பணத்தை சொத்துக்களாக மாற்றி ஒப்படைக்க வேண்டும்.

* நான்காவதாக, அயல்நாட்டு இந்தியர்களின், இந்திய சொத்துக்களை, அவர்களின் விருப்பத்தின் படி ஒரு “தனிப்பட்ட குடும்ப அறக்கட்டளை” ஒன்றை [Family Trust] இந்தியாவில் நிறுவி அதனைப் பராமரிக்கும் பணிகளைச் செய்வது.

* ஐந்தாவதாக, அயல்நாட்டு இந்தியர்கள் இங்கே இல்லை என்ற வெற்றிடத்தை நிரப்பி, இங்கே இருக்கும் அவர்களின் தொழில்களை, அறக்கட்டளை

உ சிவமயம் ஸ்ரீராமஜெயம்
**செட்டிநாடு வத்தல்கள் கிடைக்கும்**
எங்களிடம் தேன்குழல் வத்தல், கிள்ளு வத்தல், கரண்டி வத்தல், சின்ன வெங்காய வடகம் (கரிவடகம்), பிரண்ட (முறுக்கு வத்தல்), கத்திரி வத்தல், மாவத்தல், அவரை வத்தல், கேப்பை வத்தல் அனைத்து வகை வத்தல்களும் இட்லிபொடி, கவுனி அரிசி மற்றும் தடுக்கில் பின்னிய நடுவீட்டுக் கோலம் கிடைக்கும்.
தொடர்பிற்கு: லட்சுமி மணிகண்டன், காரைக்குடி
8508392087 / 8778527165 / 8760742590
ADVT

களை நிர்வகித்தல், மற்றும் அனைத்து வரிகள் பற்றிய ஆலோசனை வழங்குதல்.

* ஆறாவதாக, நம் ஊரில் தனியாக இருக்கும் வெளிநாடு வாழ் இந்தியர்களின் பெற்றோர்களைப் பராமரித்தல்.

மேலே சொன்ன காரணங்களுக்காக, நியாயமான கட்டணத்தில் இச் சேவைகளை அளித்து வருகிறோம் என்று தன் நிறுவனத்தின் நதிமூலத்தைக் கூறினார் KN. ராக்கப்பன் என்ற சுப. ராஜகோபால்.

மொத்தமாக இவை அனைத்தையும் உபயோகிக் கும் வாடிக்கையாளர்களுக்கு ஆண்டுக்கொரு முறை கட்டணம் (சந்தா) வசூலிக்கப்படுகிறது. எல்லாச் சேவைகளும் தேவையில்லை. குறிப்பிட்ட ஒரு சேவை மட்டும் போதும் என்பவர்கள் அதற்கான கட்டணம் மட்டும் செலுத்தினால் போதும். ''நாட்டில் பல நிறுவனங்கள் இச் சேவைகளை வழங்கினாலும் நமது நகரத்தார் சமூகத்தில் இது போன்றதொரு கட்டணச் சேவையை இதுவரை யாரும் செய்ததாகத் தெரியவில்லை.

இவை அனைத்துமே பணம் சம்பந்தப்பட்ட சேவைகள் என்பதால், எங்கள் பணி மிக நேர்மையாக, நாணயமாக, உண்மையாக இருக்கும். மேலும் சொத்து மற்றும் நிதி விஷயங்கள் மிகவும் ரகசியமாகப் பாதுகாக்கப்படும். பொதுவாக நம் ஊர்களில், பெரிய வீடுகள் என்றால் அதற்குள் அண்ணன் தம்பி பிரச்சனை, பங்குப் பிரச்சனைகள் இருக்கும். அதனால் வீடு பராமரிக்கப்படாமலேயே பாழடைந்து கிடக்கும். அவர்கள் விரும்பினால் நாங்கள் அண்ணன் – தம்பிகளுக்கு இடையே பேச்சுவார்த்தை நடத்தி, பிரச்சனையை சுமூகமாகத் தீர்த்து வைக்க உதவுகிறோம் என்கிறார் ராஜகோபால்.

இவர்கள் நிறுவனத்தில் சேவைகளை வழங்கவும், தேவையான ஆலோசனைகளைக் கொடுக்கவும் தகுதியான, அனுபவம் வாய்ந்த ஆடிட்டர்கள், வழக் கறிஞர்கள் இருக்கிறார்கள், ஆனால், வாடிக்கை யாளர்கள் தங்களின் பிரத்யேகமான ஆடிட்டர் அல்லது வழக்கறிஞர்தான் இருக்க வேண்டும் என்று விரும்பினால் அதையும் அனுமதிக்கிறார்கள். சென்னையிலும் காரைக்குடியிலும் தற்போது இந்த அலுவலகம் இயங்கி வருகிறது. நாணயத்துடன் செயல்படும் இந் நிறுவனத்தில் பிற சமூகத் தினருக்கும் ஆலோசனைகள், சேவைகள் அளிக்கப் படுகின்றன.

''அமெரிக்காவிலேயே செட்டிலாகிவிட்ட ஒரு வயதான தம்பதிக்கு இங்கே ஊரில் வீடு இருக்கும். அதற்கு முறையாக வரி கட்டிப் பராமரிப்பதோ அல்லது அதை விற்று அவர்கள் வாரிசுகளுக்குக் கொடுப்பதோ, எதுவாக இருந்தாலும் இங்கே அதற்கு நம்பிக்கையான ஓர் ஆள் தேவை. அதுதான் எங்கள் வேலை. எங்களிடம் முதலில் ஒரு வாடிக்கை யாளர் வரும் போது, அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்து எங்களால் அதைச் செய்ய முடியும், முடியாது என்று சொல்லி விடுவோம். முடியும் என்னும் பட்சத்தில் அதற்கான கட்டணத்தையும் கூறிவிடுவோம்.

வெளிநாடுகளில் இருக்கும் சிலர், போன் செய்து 'ஊரில் எங்கள் தாயார் உடல் நலமில்லை கொஞ்சம் பார்க்க முடியுமா?' என்பது போன்ற உதவிகளைக் கேட்கிறார்கள். அப்படிப்பட்ட உதவிகளை நாம் ஆண்டுச் சந்தா கட்டி, அனைத்து சேவைகளையும் பெறும் வாடிக்கையாளர் எனில் இது போல முதியவர்களுக்கான மருத்துவ சேவைகள் உள்ளிட்ட பல உதவிகளைச் செய்யலாம்'' என்று கூறும் ராஜகோபால் இந்த சேவைகள் தற்போது தமிழ்நாட்டில் மட்டுமே உண்டு என்கிறார்.

இதுபணம் சார்ந்த விஷயம் என்பதால் எல்லோரும் நன்கு விசாரித்து, முழு நம்பிக்கை ஏற்பட்ட பிறகுதான் வருவார்கள். அது போல சில வாடிக் கையாளர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு எங்களாலான மிகச் சிறந்த சேவையை அளித்து வருகிறோம். இந்த நம்பிக்கை வாய் மூலமாகப் பரவி, மற்றவர்களுக்குச் சென்றாலே போதும். அதனால் மிகப் பெரிய அளவில் விளம்பரம் எதுவும் நாங்கள் செய்யவில்லை. பொறுமையாக அடியெடுத்து வைத்து, நிதானமாக வளரவேண்டும். அதுதான் நிலையான வளர்ச்சி. இது எங்கள் நிறுவனத்துக்கு மட்டுமல்ல; எல்லா நிறுவனங் களுக்குமே பொருந்தும் ஆத்திச்சூடி!'' என்று புன்னகையுடன் பேட்டியை முடிக்கிறார் ராஜகோபால்.

பொதுவாக "ஏஜென்ட் என்ற கணக்குப் பிள்ளைகளின் கணக்கு தப்பவே தப்பாது" இவரும் விதிவிலக்கல்ல!

மேலும் விபரங்களுக்கு www.felicityfamilleoffices.com பார்வையிடவும்.

**பிரேமா நாராயணன்**



# திருக்கைலாயம் திருவலம்



ஆத்தங்குடி
GE.இராமநாதன்

யாத்திரை என்பது நாமிருக்கும் இடத்திலிருந்து மற்ற ஒரு இடத்துக்குச் செல்வது மட்டுமல்ல, நாமிருக்கும் நிலையிலிருந்து நாமிருக்க வேண்டிய நிலைக்கு நம்மைக் கொண்டு செல்வதும் ஆகும். அது உள்ளத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. அலைச்சல்கள் தேடலாக மாறி, அந்த தேடல்கள் பயணமாக மாறச் செய்வதே திருத்தல யாத்திரைகள். அவற்றில் சிகரமாகக் கருதப்படுவது திருக்கயிலை யாத்திரையே.

சென்னை திருவான்மியூரில் உள்ள மருந்தீஸ்வரர் ஆலயம் செல்லும் வாய்ப்பு கிடைத்தது, அச்சமயம் அம்மன் சன்னதி பிரகாரத்தில் கைலாஷ் புகைப்படங்களை கண்டபோது நான் மிகவும் ஆச்சரியத்தில் சிலிர்த்துப் போனேன். “கயிலை சென்றால் சிவபெருமானை இவ்வளவு நெருக்கமாகக் கூட காண முடியுமா” என என்னை நானே கேட்டுக் கொண்டேன். அத்தகைய ஒரு கொடுப்பினை எனக்கு இருந்தால் அதைவிடப் பெரிய பிறவிப்பயன் வேறு என்னவாக இருக்க முடியும் என, கற்பனையில் சிவபெருமானை கண்டு மகிழ்ந்தேன்.

2018-ல் துபாயில் இருக்கும் போது “அரோகரா”அருணாச்சலம் அவர்கள் வீட்டில் தெரிந்த சில குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஒரு சிவராத்திரி இரவில் பக்தி பாடல்கள் பாடிப் பரவசம் அடைந்தோம். கைலாசநாதர் புகைப்படங்களை கண்டது முதல் அதே நினைவில் இருந்த நான், பாட வந்தவர்களிடம் “நாம் அனைவருமே கைலாச மலை சென்று தரிசனம் செய்து வரலாமா” என்றேன். அதற்கு அவர்கள் அனைவரும் உற்சாகத்துடன் ஒருமித்த குரலில் “போகலாமே” என்று சொல்ல அனைவரும் மகிழ்ந்தோம். பின்னர் அது குறித்து செய்திகள் சேகரிக்கத் தொடங்கினேன். காரைக்குடி அண்ணன் அழகப்பன், அவரது மனைவி மீனாட்சி தம்பதியினர் கைலாஷ் சென்று வந்தது தெரியவந்தது. அவருடன் ஆலோசனை செய்தேன். அவரது ஆலோசனைப்படி, அவர் தெரிவித்த நிறுவனத்தில் என் பெயரை பதிவு செய்து கொண்டு, பின்னர் எனது உற்றார் உறவினரிடம் இது குறித்துக் கூற, ஒரு பெரிய பக்தி பட்டாளமே யாத்திரைக்குத் தயாராகி விட்டது.





### திருக்கைலாயம் எங்கே உள்ளது?

கைலாய மலை சீனாவின் ஒரு பகுதியாக உள்ள திபெத்திய பீடபூமியில் கடல் மட்டத்திலிருந்து 21,778 அடி (6,666 மீட்டர்) உயரத்தில் உள்ளது (இமயமலை 29,035 அடி உயரம்). இங்கு செல்ல சைனா விசா வாங்க வேண்டும்.

### கைலாஷ் யாத்திரை புறப்படுவதற்கு முன்னர் செய்ய வேண்டியதும், கடைபிடிக்க வேண்டிய விரதங்களும்:

புலால் உணவு, புகைப்பிடித்தல், மதுப்பழக்கம் மற்றும் தாம்பத்திய உறவு இவற்றை தவிர்த்து ஒரு மாதம் விரதம் இருக்க வேண்டும்.

ஹண்டர் (Hunter) மவுண்டன் ஸ்போர்ட்ஸ் ஷூ அணிந்து தினமும் அரை மணி நேரமாவது நடைப்பயிற்சி/ஜாகிங் செய்ய வேண்டும்.

கைலாசநாதரை நாடிச் செல்லும் நமது ஆசை நிறைவேற வேண்டி, திருவாசகம் ஆறாம் திருமுறை "வேற்றாகி விண்ணாகி" பாடலை தினமும் மனமுருகி நல்ல தரிசனம் கிடைக்க வேண்டி பாட வேண்டும்.

சிவாலயம் மற்றும் கோயில்கள் தினமும் செல்ல வேண்டும். தினமும் பிராணாயாமம் போன்ற மூச்சுப் பயிற்சிகள் மற்றும் ஆழ்நிலை தியானம் செய்து உடலையும் மனதையும் கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டும்.

வாட்ஸ் அப்பில் "கைலாஷ் குரூப்" என்ற பெயரில் ஒரு குரூப் தொடங்கி மற்றவர்களின் ஆலோசனைகளும் அனுபவங்களையும் அறியலாம்.

யாத்திரைக்கு பெயர் பதிவு செய்த நாள் முதல் மனம் பரவசத்தில் மூழ்கியது என்றாலும், இந்த 12 நாள் நீண்ட பனி மலை பிரயாணம் நல்லவிதமாக முடியவும், சிவபெருமானின் தரிசனம் எங்கள் அனைவருக்கும் மனம் நிறைவு அடைய கிடைக்க வேண்டுமே என்ற கவலையும் அச்சமும் இருந்தது.


"அவன் அருளால் அவன் தாள் வணங்கி" என்ற சிவபுராண வாசகத்துக்கு ஏற்ப அவன் மீதே பாரத்தை போட்டவனாக, ஆக வேண்டிய நடைமுறைகளை கவனிக்கத் தொடங்கினேன்.

கைலாஷ் யாத்திரை செல்ல, முன்னோர்கள் செய்த புண்ணியம் முக்கிய பங்கு வகிக்கிறது என பெரியவர்கள் சொல்வதுண்டு. 'உலகைக் காக்கும் கடவுளான சிவபெருமானை' தரிசிக்கும் பாக்கியம் எனக்கு கிடைக்க எனது ஐயா ஆத்தங்குடி ராமநாதன் செட்டியார் (சிவலிங்கம் செட்டியார் வீடு) அவர்கள் செய்த புண்ணியம்தான் என என் மனம் சொல்லியது. அந்த அளவுக்கு எனது ஐயா மிகச் சிறந்த பக்திமான். பல தொண்டுகள் செய்து புண்ணியம் தேடியவர்.

### திருக்கயிலாயம் 3 வழிகளில் போகலாம்:

1. லக்னோவிலிருந்து ரோடு வழியாக நேபாள் கஞ்ச் செல்வது. 2. காத்மண்டு நேபாளம் வழியாக ஹெலிகாப்டரில் செல்வது. 3. திபத், லாசா (Tibet, Lhasa) ரோடு வழியாகச் செல்வது.

நாங்கள் அனைவரும் நேபாள் வழியாக செல்வதையே விரும்பினோம். காரணம் நேபாளில் உள்ள பல பல கோயில்களைக் கண்டு தரிசிக்கலாம் மற்றும் லாசா வழியை விட செலவும் குறைவு. முழுவதும் ரோடு வழியாகச் சென்றால் அதிக நாள் எடுக்கும். மற்றும் நேபாளில் உள்ள ரோடுகள் சரியாக இருக்காது.




சைனா விசா பெறுவதற்கு, நமது பாஸ்போர்ட் ஆறு மாதத்திற்கு மேல் செல்லத்தக்கதாக (validity) இருக்க வேண்டும். எங்களின் பாஸ்போர்ட் சைஸ் கலர் போட்டோ மற்றும் எங்கள் டிராவல்ஸ் கேட்ட ஆவணங்கள் அனைத்தும் ஒரு வாரம் முன்பே கொடுத்து விட்டோம். விசா பெற்ற பின்னர் தான் நமது பாஸ்போர்ட் நமது கைக்கு திரும்பும்.

பயணம் தொடரும்...



‘‘உனக்குள் ஓர் ஆசை எழுகிறது என்றால், அதை அடையக்கூடிய திறமையும் தீவிரமும் உன்னுள் இருப்பதால் தான் அந்த ஆசை எழுந்தது’ என்பது அமெரிக்க தன் முனைப்பு எழுத்தாளர் ஜேம்ஸ் ஆலனின் பொன்மொழி. என்னை மிகவும் கவர்ந்த இப் பொன்மொழி 100% உண்மை என்று எடுத்துக்காட்ட என் வாழ்க்கையே ஒரு நல்ல சான்று’’. என்று தன் டிரேட் மார்க் புன்னகையுடன் உற்சாகம் ததும்ப பேசத் தொடங்குகிறார், ஊடகங்களில் பிரபலமான நம்மவர் இராம்குமார் சிங்காரம்.

எண்ணங்களில் விவேகம்; செயல்களில் வேகம் - இதுதான் இராம்குமார் சிங்காரம். தேனீயை விட ஒரு படி மேலே சுறுசுறுப்பானவர். கடகடவென எக்ஸ்பிரஸ் வேகத்தில் இவர் பேசும் விதத்திலேயே அது நமக்குப் புரியும்.

‘யார் இந்த இராம்குமார் சிங்காரம்?’ என்று யோசிப்பவர்களுக்கு அவரைப் பற்றி ஒரு சிறு அறிமுகம்...

# எண்ணத்தில் விவேகம்! செயலில் வேகம்!

## இராம்குமார் சிங்காரத்துடன் நேர்காணல்

பிரேமா நாராயணன்



அனைத்து ஊடகங்களிலும் பணிபுரிந்த அனுபவம் கொண்ட தமிழகத்தின் வெகு சில பத்திரிகையாளர்களில் இவரும் ஒருவர். அது மட்டுமல்ல... எழுத்தாளர்; தன்னம்பிக்கை பேச்சாளர்; மக்கள் தொடர்பு ஆலோசகர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர். கலைஞர் தொலைக்காட்சியில் வாரந்தோறும் வியாழன் அன்று காலை 8.15 மணிக்கு இவர் பேசுவதை நாம் கேட்கலாம்.

**உங்களைப் பற்றிய அறிமுகத்துடன் ஆரம்பிக்கலாமே..!**

‘‘என் சொந்த ஊர் நெற்குப்பை. இளையாற்றங்குடி – கழனிவாசல்குடி பிரிவைச் சேர்ந்தவன். தந்தை சிங்காரம் செட்டியார், தாயார் நல்லம்மை ஆச்சி. எனக்கு ஒரு அண்ணன், இரு ஆச்சிகள். எனது தந்தை மதுரையில் வட்டிக் கடை நடத்தி வந்தார். வசதியான குடும்பம் என்று சொல்லிவிட முடியாது. அடிப்படை தேவைகளுக்கு பிரச்சனை இல்லாத ஒரு நடுத்தர குடும்பம் எங்களுடையது. ஆனால், ஆச்சிகள் இருவரின் திருமணத்திற்குப் பிறகு வட்டிக் கடையில் பணம் இல்லாத

காரணத்தால் ஏழ்மை நிலை சூழத் தொடங்கியது. படிப்பதற்குக் கூட பணமில்லாத நிலை. அப்போதைக்கு அது பெரிய பிரச்சனை என்றாலும் கூட, அந்த ஏழ்மைதான், என்னுடைய அடிப்படை வளர்ச்சிக்கு முதல் காரணமே! 'இளமையில் ஏழ்மை' என்பது ஜீரணிக்க சிரமமாக இருந்தாலும் கூட, நானே சுயமாக சம்பாதிக்க வேண்டும் என்ற வேட்கையை என்னுள் அது உருவாக்கியது. பகுதி நேர வேலை ஏதாவது செய்து சம்பாதிக்க வேண்டுமே என்ற உந்துதல் தோன்றியதும் அதனால்தான். பள்ளியில் படிக்கும்போதே சிறு சிறு வேலைகள் செய்யத் துவங்கினேன். எது நமக்கு 'நெகட்டிவ்' ஆன விஷயமோ, அதை 'பாஸிடிவ்' ஆக மாற்ற வேண்டும் என்ற வேகமும் வைராக்கியமும் என்னுள் இருந்தன''.

**படிக்கும் போதே பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற உங்கள் எண்ணம் நிறைவேறியதா?**

''ஆமாம். பள்ளி, கல்லூரி இரண்டு பருவத்திலுமே நிறைவேறியது. பதினோராம் வகுப்பு படிக்கும் போதே, மாலையில் வீடு வீடாகச் சென்று புத்தகம் போடும் 'சர்குலேஷன் லைப்ரரி' தொழிலை பகுதி நேரமாக நடத்தத் தொடங்கினேன். அதில் பெரிய லாபம் வரவில்லை என்றாலும், வாசிப்பில் பெருத்த ஆர்வம் கொண்ட எனக்கு நல்ல பல புத்தகங்களை செலவில்லாமல் படிக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. நான் பத்திரிகையாளர் ஆவதற்கு அடித்தளமாக அமைந்ததும் அந்தத் தொழில்தான்.

பிறகு மதுரை தியாகராஜர் கல்லூரியில் சேர்ந்தேன். பகுதி நேர வேலையாக 'அடுத்து என்ன செய்யலாம்?' என்று யோசித்த போது, 'கடைத் தெருவில் உள்ள கடைகளின் பெயர்ப் பலகைகளை எல்லாம் வருடத்துக்கு ஒரு முறைதான் சுத்தம் செய்கிறார்கள். தினமும் அதைச் செய்து கொடுக்கலாம்' என்று ஒருவர் சொன்ன யோசனை புதுமையானதாக இருந்தது. அதுவரையில் அப்படி ஒரு யோசனை யாருக்குமே தோன்றவில்லை. அந்தப் பணியை நானும் என் நண்பர்கள் மூன்று பேரும் சேர்ந்து செய்ய முடிவெடுத்தோம். 'உழைத்து முன்னேற வாய்ப்பு கேட்கிறோம். ஆதரவு தாருங்கள்' என்று ஒரு பிட் நோட்டீஸ் அடித்து கடைகடையாக விநியோகித்தோம். மதுரையில் சுமார் 400 கடைகளில் ஆர்டர் எடுத்து அதிகாலை வேளையில் சைக்கிளில் ஏணியை தூக்கிக் கொண்டு கடை கடையாகப் போவோம். தினசரி 40 கடைகள் என்ற வீதத்தில் பெயர்ப் பலகைகளை எல்லாம் சுத்தம் செய்துவிட்டு, மாதம் ஒரு முறை அதற்கான கட்டணத்தை வசூலிப்போம். ஆண்டுக்கு ஒரு முறை பெயர்ப்பலகையைச் சுத்தம் செய்யும் கடைக்காரர்களுக்கு அந்தத் தொழில் புதுமையாக இருந்த காரணத்தால் எங்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. பிரபல நாளிதழ் ஒன்றில் 'கல்லூரி மாணவர்கள் செய்யும் பகுதி நேரத் தொழில்' என்று எங்களைப் பற்றி வெளிவந்த செய்தி, எங்களுக்கு மிகப் பெரிய ஊக்கமாக இருந்தது. அதில் ஓரளவு நல்ல வருமானமும் கிடைத்ததால், என் படிப்புச் செலவையும் சமாளிக்க முடிந்தது. அதோடு, அந்த வேலை என் வாழ்வில் மிகப் பெரிய திருப்பு முனையை ஏற்படுத்தியது. பிற்காலத்தில் விளம்பரங்கள் வாங்குவதற்கு அந்தத் தொடர்புகள் பெரிதும் உதவின.''

**வழக்கமான மாணவனாக இல்லாமல் ஒரு குறிக்கோளுடன் இருந்திருக்கிறீர்கள்...**

''நிச்சயமாக. கல்லூரிப் பருவத்தில் மாஸ் கட் அடித்தால் கூட சினிமாவுக்குச் செல்லாமல், வீட்டுக்கு வந்து புத்தகம் படிப்பேன். 'பணம் சம்பாதிக்க வேண்டும்' என்ற ஒரே குறிக்கோள்தான் எனக்குள். ஓய்வு நேரத்தில் நல்ல தமிழ் சொற்பொழிவுகள், நாட்டுப்புற இசைக் கச்சேரி, சாலமன் பாப்பையா பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகளைக்



கேட்கக் கிளம்பி விடுவேன். வீட்டிலும் எனக்கு முழுமையான சுதந்திரம் இருந்தது. அச்சமயத்தில் பிரபல சொற்பொழிவாளர் சொ.சொ.மீ. சுந்தரம் அவர்களின் பேச்சைக் கேட்க நேர்ந்தது. 'நமது இளைஞர்கள் திருமணத்திற்கு முன்பே சொந்தத் தொழிலைத் தொடங்கி விட வேண்டும்' என்று அவர் அப்போது கூறிய ஆலோசனை என் மனதில் ஆழமாகப் பதிந்ததுடன் எனது லட்சியத்துக்கு உரம் போட்டதென்றும் சொல்லலாம்.''

**பத்திரிகையுலகில் பலகாலம் அனுபவம் பெற்றவர் நீங்கள்... படிப்பை முடித்ததுமே பத்திரிகைத் துறையில் சேர்ந்துவிட்டீர்களா?**

''இல்லை. கல்லூரிப் படிப்பை முடித்தவுடன், எனக்கு மதுரையில் உள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டு மையத்தில் பயிற்சியாளராக வேலை கிடைத்தது. தொழில் தொடங்க வேண்டும் என்ற உந்துதலை எனக்குள் இன்னும் அதிகப்படுத்த அந்த வேலையும் உதவியது. மூன்றே மாதங்களில் எனக்கு சென்னையில் என் படிப்புக்கேற்ற ஒரு வேலை கிடைத்ததால் சென்னைக்குப் புறப்பட்டு விட்டேன். 1994ல் சென்னை வந்தேன். 'Bulls Eye' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் பங்குச்சந்தை ஆய்வாளராக பணியைத் தொடங்கினேன். நான் படித்த படிப்பு பங்குச் சந்தை சார்ந்தது என்பதால் அந்தப் பணி எளிமையாக இருந்தது. ஆர்வத்தையும் தந்தது.

வந்தாரை எல்லாம் வாழவைக்கும் சென்னை, எனக்கும் படிப்படியாக வாழ்க்கையில் முன்னேற வாய்ப்புகளைக் கொடுத்தது. பங்குச்சந்தை ஆய்வாளர் பணியில் இருக்கும்போதே, 'வளர் தொழில்' பத்திரிகையில் நிதி தொடர்பான கட்டுரைகள் எழுதும் பகுதி நேர நிருபராகப் பணியாற்றினேன். ஆங்கிலத்தை விட தமிழில் எனக்கு மொழி ஆளுமை நன்றாக இருந்ததால், 'வளர் தொழில்' பத்திரிகையின் துணை ஆசிரியர் பணிக்கு மாறினேன். மதுரையில் பயிற்சியாளராக இருந்தபோது 'வளர் தொழில்' பத்திரிகையை வாங்கிப் படித்ததுண்டு. அந்தப் பத்திரிகையின் இம்பிரின்டில் என்னுடைய பெயர் வந்ததைக் கண்டு, என்னை விட என் குடும்பம் மகிழ்ச்சியிலும் பெருமையிலும் மூழ்கியது. அப் பத்திரிகைகளில் மூன்று ஆண்டுகளில் 500க்கும் மேற்பட்ட தொழில் முனைவோர்களைப் பேட்டி கண்டு எழுதினேன். அது போதாதா, என்னுடைய சுய தொழில் ஆர்வத்தைத் தூண்டிவிடுவதற்கு..!'' என்று கூறி அவர் சிரிக்க, என் கேள்வி தொடர்ந்தது.

(தொடரும்)

## தேவகோட்டையில் ராமர் கோவில் அடிக்கல் நாட்டு விழா

தேவகோட்டையில் உள்ள காசிஸ்ரீ அரு.சோ.அவர்கள் தனது இல்லத்தில் அரு.சோ.நீலா அரங்கத்தை விரிவுபடுத்தி ராமர்கோவில் கட்டுவதற்கான பூமி பூஜை 23.11.20 அன்று தேவகோட்டை ஜமீன்தார் சோம. நாராயணன் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அரு.சோ குடும்பத்தினர், பிரமுகர்கள், பொதுமக்கள் நிகழ்ச்சியில் பங்குபெற்றனர்.



## கந்தர் சஷ்டி லட்சார்ச்சனை, திருக்கார்த்திகை தீபத் திருவிழா

கண்டவராயன்பட்டி தண்டாயுதபாணி கோவிலில் கந்தர் சஷ்டி விழாவை முன்னிட்டு தண்டாயுதபாணிக்கு அபிஷேக ஆரா தனைகள், லட்சார்ச்சனை நடைபெற்றன. பக்தர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர். 3000 அர்ச்சனைகள் செய்யப் பெற்றன. அன்னதானமும் நடைபெற்றது.

திருக்கார்த்திகை அன்றும் தண்டாயுத பாணிக்கு அபிஷேக ஆராதனைகள், அன்ன தானம் நடைபெற்றன. இரவு சுப்பிரமணியர் வள்ளி தெய்வானையுடன் வெள்ளிமயில் வாகனத்தில் திருவீதி உலா வந்தார். சொக்கப்பனை கொழுத்தப் பெற்றது. மேற்படி விழாக்களின் ஏற்பாடுகளை நடப்புக் காரியக்காரர் NSS.சிவசுப்ரமணியம், சிவ.சொக்கலிங்கம், உப யதாரர் தே.சுப்ர மணியம், சிவராமகிருஷ்ணன், ராம. தேனப்பன், முத்துராமன், தமிழ் செம்மல் டாக்டர் சே.குமரப்பன் செய்திருந்தனர்.




**வள்ளி முத்தையா**



காரைக்குடியில் பிறந்த இவர், மாத்தூர் (அரும் பாக்கூர்) கோயிலைச் சேர்ந்தவர். கோவை அவி நாசிலிங்கம் பல்கலைக் கழகத்தில் பி.எஸ்சி (உணவு அறிவியல் மற்றும் ஊட்டச் சத்து) படித்து விட்டு, தற்போது சமூக ஊட்டச்சத்து என்ற பிரிவில் முதுகலை படிப்பு படித்துக் கொண்டிருக்கிறார். மிகுந்த தன்னம்பிக்கையும் தளராத முயற்சியும் கொண்ட வள்ளிக்கு சமையல் செய்வது, ஓவியம் வரைவது, புத்தகம் வாசிப்பது பிடித்தமானவை.


# ஆரோக்கியம் தரும் அறுசுவை உணவு

## உடல் நலத்திற்கேற்ற உணவு வழிகாட்டி

'நீங்கள் உண்ணும் உணவை வைத்தே உங்கள் குணநலன்களைச் சொல்லி விடலாம்' என்று ஒரு முதுமொழி உள்ளது. ஆனால் வாழ்க்கை முறையும் உணவு முறைகளும் தலைகீழாக மாறி விட்ட இந்த நவீன காலத்தில், ஒருவர் தட்டில் இருக்கும் உணவை வைத்தே அவர் உடலில் என்ன குறைபாடு இருக்கிறது என்று கூறிவிடலாம் போலிருக்கிறது.

டீக்கடைகளில் இப்போதெல்லாம், 'சர்க்கரை போடலாமா?'' என்று கேட்காமல் டீ, காபி போடுவ தில்லை. நாம் செல்லும் உறவினர் இல்லங்களிலும் அப்படித்தான். காரணம், சர்க்கரை நோய். இது போல இன்னும் ரத்தக்கொதிப்பு, கொலஸ்டிரால், தைராய்டு, மூட்டு வலி, முதுகு வலி என்று ஏராளமான நோய்கள்.

உடலில் ஒரு பிரச்னை வந்துவிட்டால், அதற்கேற்ப என்ன சாப்பிடலாம், எதைத் தவிர்க்கலாம் என்ற விழிப்புணர்வு ஓரளவுக்கு மக்களுக்கு வந்திருப்பது பாராட்டத்தக்கது. இருந்தாலும், உணவு முறைகளாலேயே நம் உடலுக்கு வரும் நோய்களைக் கட்டுப்படுத்திய நம் முன்னோர்களின் வழியிலேயே நாமும் செல்வதற்கான ஒரு சிறு முயற்சிதான் இந்தத் தொடர்.

வளர்ந்து வரும் உணவு மற்றும் ஊட்டச்சத்து நிபுணர் வள்ளி முத்தையா, இத் தொடரில் உடலில் இருக்கும் குறைபாட்டுக்கு ஏற்ற உணவுகள் எவை, தவிர்க்க வேண்டிய உணவுகள் எவை என்ற பட்டியலை தொடர்ந்து வழங்கவிருக்கிறார். வாசிப்பதோடு நிறுத்திவிடாமல், வாழ்க்கை முறை மற்றும் உணவு முறையில் சிறு சிறு மாற்றங்கள் செய்து நலவாழ்வில் அடியெடுத்து வைப்போமே!

### நீரிழிவு (Diabetes Mellitus)

'நீர் + அழிவு' என்பதைத்தான் நீரிழிவு அல்லது சர்க்கரை நோய் என்கிறோம். ரத்த சர்க்கரை அளவை அதிகரிக்கக் கூடிய வளர்சிதை மாற்ற சீர்குலைவுகள்தான் நீரிழிவு எனப்படுகிறது. நமது உடலில் சுரக்கும் முக்கியமான ஹார்மோன்களில் ஒன்றான இன்சுலின், தன் சமச்சீர் நிலையை இழப்பதால் இந்நிலை தோன்றுகிறது. மனித உடலில் சர்க்கரையை உடலுக்குத் தேவையான சக்தியாக மாற்ற அத்தியாவசியமானது இன்சுலின். சர்க்கரை அளவு கட்டுப்படுத்தப்படவில்லை என்றால் பல சிக்கல்கள் உருவாகும்.

சர்க்கரை நோயில் டைப் 1, டைப் 2, டைப் 3 என மூன்று வகைகள் உள்ளன இவற்றுள் டைப் 1 என்பது குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய இன்சுலின் குறைபாடு. இவர்களுடைய இன்சுலின் சுரப்பிகள் இன்சுலின் சுரக்கும் தன்மையை முற்றிலுமாக இழந்திருக்கும் என்பதால், இன்சுலின் கொண்டு சிகிச்சை அளிக்க வேண்டும்.

சர்க்கரை நோயாளிகளில் 90% பேருக்கு இருப்பது டைப் 2 என்னும் வகைதான். இன்சுலின்

# பழனி பாதயாத்திரை சாமியாடி ஐயாக்கள் முக்கிய அறிவிப்பு

*2021 ஜனவரி தைப் பூசத்திற்கு பழனி காவடி, பாதயாத்திரை செல்ல எண்ணியுள்ள நகரத்தார் பெருமக்களின் முக்கிய கவனத்திற்கு சாமியாடி ஐயாக்கள் மூவரும் கூட்டாக ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளனர். அதன் விபரம் வருமாறு:*

தற்போது COVID-&19 என்கிற நோய் பரவி அதனுடைய தாக்கம் எல்லா இடங்களிலும் ஏற்பட்டு இருப்பதும், அரசு அதைத் தடுக்கும் முயற்சியினை மேற்கொண்டு இருக்கிறது என்பதும், யாவரும் அறிந்ததே. அவ்வாறான சூழ்நிலையில் அரசு விதிமுறைகளின்படி கூட்டமாக கூடுவது தவிர்க்கப்பட வேண்டியதாக இருக்கிறது. அரசு வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டிய கட்டாயமான சூழ்நிலையிலும் சமூக பாதுகாப்பு கருதியும் நம் நகரத்தார்களின் பாதுகாப்பு மற்றும் நலன் கருதியும் இந்த சார்வரி வருட பழனி பாதயாத்திரை, முத்திரை எடுப்பது, பால்குடம் எடுப்பது, அடிவாரக் காவடி எடுப்பது உட்பட அனைத்து பிரார்த்தனைகளையும் அடுத்து வரும் காலங்களில் செலுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மேற்கண்ட சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு செட்டிநாட்டில் எல்லா ஊர்களில் வாழும் நகரத்தார்களும், தொழில் நிமித்தம், பணி நிமித்தமாக வெவ்வேறு மாநிலங்கள், மாநகரங்கள், நகரங்கள், வெளியூர்கள், வெளிநாடுகளில் வசித்து வரும் நகரத்தார் பெருமக்களும் முழுமையான ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

மேலும் COVID *–19* சம்பந்தமாக அரசு வெளியிட்டுள்ள விதிமுறைகளைத் தளர்த்தும் பட்சத்தில் அதற்கேற்ப பாதயாத்திரை முத்திரை (காவடி) மற்றும் பால்குடம் எடுப்பது ஆகியவை சம்பந்தமாக, தக்க முடிவுகளை எடுத்து அறிவிக்கவும் தயாராக இருக்கிறோம் என திருவாளர்கள் கும. ஜெயங்கொண்டான் செட்டியார்–(நெற்குப்பை பூசாரி ஐயா), பழ. பழனியப்ப செட்டியார் – (கண்டனூர் சாமியாடி ஐயா), கும. பழனியப்ப செட்டியார் – (காரைக்குடி அரண்மனைப் பொங்கல் ஐயா), ஆகியோர் கூட்டாக *24.11.2020* மற்றும் *07.12.2020* அன்று விடுத்த அறிக்கைகளில் தெரிவித்துள்ளார்கள்.

---

சுரப்பிகள் போதுமான அளவு இன்சுலினைச் சுரப்பதில்லை. அல்லது சுரக்கும் இன்சுலினுக்கு எதிர்வினை ஏற்படுவதால் உண்டாகிறது. உடல்பருமன் உள்ளவர்களிடம் அதிகமாகக் காணப்படும் இந்த வகை நீரிழிவை, உணவுக் கட்டுப்பாடு, முறையான உடற்பயிற்சி மற்றும் உடல் பருமனைக் குறைத்தல் போன்ற வழிமுறைகளால் கட்டுப்படுத்தலாம்.

டைப் 3 வகை நீரிழிவு, கர்ப்பகாலத்தில் கர்ப்பிணி பெண்களுக்கு ஏற்படுவது. குழந்தை பிறந்ததும் பெரும்பாலும் இது மறைந்துவிடும். ஆனால் அந்தத் தாய்க்கும், குழந்தைக்கும் பிற்காலத்தில் சர்க்கரை நோய் வரும் வாய்ப்புள்ளது.

**சர்க்கரை நோயின் பெரும்பாலான அறிகுறிகள்:**

* உடல் எடை குறைதல் * தெளிவற்ற பார்வை *அடிக்கடி சிறுநீர் கழிப்பது *அடிக்கடி தாகம் எடுப்பது * அதிகப் பசி * அதிக சோர்வு * வழக்கத்துக்கு அதிகமாக சிறுநீர் கழித்தல் (பாலியூரியா) * சிறுநீரில் இனிப்பு கலந்திருக்கும் நிலை (கிளைக்கோசூரியா)

**சர்க்கரை நோயாளிகள் சேர்த்துக் கொள்ள வேண்டிய உணவுகள்:**

*சிறுதானிய உணவுகள் *பயறு வகைகள் *பருப்பு வகைகள் *நார்ச்சத்து நிறைந்த காய்கறிகள் *கீரை வகைகள் *நீர் காய்கறிகள் *அதிக இனிப்பில்லாத பழங்கள் *நீர் மோர்

**தவிர்க்க வேண்டிய உணவுகள்:**

* வெள்ளை உணவுகள் (அரிசி/வெள்ளை சர்க்கரை/ ரவை)
* கிழங்கு வகைகள் (உருளைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு, பனங்கிழங்கு, கருணைக்கிழங்கு, சர்க்கரைவள்ளி, கேரட், பீட்ரூட்)
* அதிக இனிப்பு உள்ள பழங்கள் (சப்போட்டா, மாம்பழம், பலாப்பழம், வாழை, அன்னாசி)
* மைதா உணவுகள் (பிரெட் முதலிய பேக்கரி தயாரிப்புகள்)
* பாக்கெட்டில் அடைக்கப்பட்ட மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகள்
* பழச்சாறு வகைகள்
* ஓட்ஸ் (அ) கார்ன்ஃப்ளேக்ஸ்
* லஸ்ஸி, யோகர்ட்
* வறுத்த, பொறித்த உணவுகள், சிற்றுண்டிகள்
* வெல்லம், நாட்டுச்சர்க்கரை, பனைவெல்லம் (சர்க்கரை அளவு கட்டுக்குள் வரும் வரை)

– நலப்பயணம் தொடரும்...

Introducing

# Felicity Famille Offices

- Family Welfare & Concierge
- Asset Protection & Management
- Financial Planning & Wealth Advisory
- Compliances & Assurances
- Business Consulting
- Philanthropy & Charities



## Our Clients

- HNW Individuals & families
- Non Resident Indians
- Self employed professionals
- Arts & sports professionals
- MSME & Women Entreprenuers
- Millennials (to) Senior Citizens
- Start Up entities

*Felicity is a unique single window eco system offering support services to their Clientele in preserving and stimulating their wealth & legacy in India*

Affluence Assured

Share your e-Mail ID, we'll be in touch with you

Reach us at

+91-9884001959 | support@ffocorp.com | www.felicityfamilleoffices.com

## தொழில் தொடங்கலாம் வாங்க 22




# அமோக விற்பனைக்கு அடித்தளம் விளம்பரம்



சேதுராமன் சாத்தப்பன்

**சென்ற இதழில் விற்பது என்பதை கலை என்பது பற்றி பார்த்தோம். அதன் தொடர்ச்சியை இந்த இதழில் காண்போம்.**

ஒரு பொருள் நன்றாக விற்பதற்கு அந்த பொருளின் தரம் 80 சதவீதம் காரணமாக இருக்கிற தென்றால், மீதம் 20 சதவீதம் அந்தப் பொருளை எப்படி பிராண்டிங் செய்யப்படுகிறது?, எப்படி அழகான முறையில் பேக்கிங் செய்யப்படுகிறது?, எப்படி சிறப்பாக விளம்பரப்படுத்தப்படுகிறது? என்பதில் அடங்கியிருக்கிறது.



விற்கும் கலையில் “விளம்பரம்“ முக்கிய இடம் வகிக்கிறது. விளம்பரம் இல்லாமல் பொருட்களை இந்த காலத்தில் விற்பது மிகவும் கடினமான ஒரு செயலாக இருக்கிறது. நீங்கள் தயாரிக்கும் பொருட்கள் எவ்வளவு தான் நன்றாக இருந்தாலும் சரியானபடி பிராண்டிங், பேக்கிங், விளம்பரம் இல்லாத போது பொருட்கள் எதிர் பார்த்தபடி விற்பனையாகாமல் முடங்கிக் கிடக்க வாய்ப்புகள் உள்ளன.

விளம்பரம் மூலம் தங்கள் வியாபாரத்தை சிறப்பாக பெருக்கிக் கொண்ட சில நிறுவனங்கள் என்று பார்த்தால் அன்றாடம் நாம் டிவியில் பார்க்கும் பவர் சோப், அரசன் சோப், ஆச்சி மசாலா, சக்தி மசாலா ஆகியவைகளை உதாரணமாகக் கூறலாம்.

பழைய காலத்தில் பாறைகளில் தொடங்கப்பட்ட விளம்பரங்கள் பின்னர் தெருவெங்கும் சுவர்களை அலங்கரித்தன. பின்னர் சுவரொட்டிகள், நாளிதழ்கள், வானொலி, தொலைக்காட்சி என்பதையும் தாண்டி தற்போது டிஜிட்டல் மீடியா என்ற அளவில் வந்து நிற்கிறது.

ஒரு உதாரணத்திற்கு கூறப்போனால் இன்றைய தினம்கூட நாம் செட்டிநாடு பக்கம் செல்லும்போது ஆதிகாலத்து அலங்கார மாளிகை, அ.செ. செட்டியார் ஜுவல்லர்ஸ் சுவர் விளம்பரங்களை பார்க்காமல் பயணிப்பது கடினம். இவர்கள் தங்கள் பொருள்களின் மீது வைத்த நம்பிக்கைக்கு சமமாக விளம்பரங்கள் மீதும் நம்பிக்கை வைத்திருந்தார்கள். அதுதான் இவர்கள் வியாபார அபிவிருத்திக்கு காரணம். இதுபோல இன்னும் பல நிறுவனங்கள் நமது செட்டிநாடு பக்கமும், தமிழ்நாட்டிலும் இருக்கின்றன.

எனவே உங்கள் கம்பெனியின் பொருட்களை விற்பனைக்கு கொண்டு செல்லும்போது விளம்பரத் தையும் மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.

விற்பனை கலை அடுத்த இதழிலும் தொடரும்....

### இந்த மாதம் மெண்டர் பிட்னஸ் ஒன் (FITNESS ONE) அருண் கதிரேசன், கண்டனூர்



நமது இளைஞர்கள் பயன் பெறும் வகையில் ஒவ்வொரு மாதமும் ஒரு துறையில் சிறப்பாக பரிணமித்து வரும் தொழிலதிபர்களை நமது செட்டிநாடு இதழ் மூலம்

அறிமுகப்படுத்தி வருகிறோம். தொழில் செய்ய விரும்பும் நமது இளைஞர்களும் இவர்களுடன் தொடர்பில் இருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி.

இந்த மாதம் நாம் அறிமுகப்படுத்தவிருப்பது கண்டனூரைச் சேர்ந்த அருண் கதிரேசன் அவர்களை.

அருண் கதிரேசன் 2005ம் வருடம் சென்னையை தலைமையிடமாக கொண்டு தொடங்கப்பட்ட "பிட்னஸ் ஒன்" (FITNESS ONE) என்ற சங்கிலி தொடர் உடற்பயிற்சிக் கூடங்களை இணைந்து நடத்தி வருகிறார். இதற்கு 65 கிளைகள் தென்னிந்தியா முழுவதும் இருக்கிறன. இந்த வருடம் ஜனவரியில் பிக்கி (FICCI) மற்றும் டான்கேர் (TANCARE) இவர்களது கம்பெனியை சிறந்த பிட்னஸ் ஜிம் (FITNESS GYM) நிறுவனமாக தேர்ந்தெடுத் தெடுத்திருக்கிறது. பெண்களுக்காக "பிங்க் பிட்னஸ்" (PINK FITNESS) என்ற பெயரில் தென்னிந்தியாவில் 50 உடற்பயிற்சி கூடங்களும் நடத்தி வருகிறார்கள்.

லயோலா கல்லூரியில் எம்பிஏ படிப்பு முடித்தவுடன் தனியார் வங்கியில் அதிகாரியாக தனது பணியை தொடங்கினார். பங்குச் சந்தையின் மீது அதிக ஆர்வத்தில் இருந்ததால் 10 வருடங்கள் வங்கி பணி முடிந்ததும், ரிலையன்ஸ் மியூச்சுவல் பண்டில் சேர்ந்து பின்னர் அந்த நிறுவனத்தின் பாங்கிங் ஃபண்ட் (BANKING FUND) பொறுப்பாளராக இருந்தார். இதுதான் இந்தியாவின் முதல் பாங்கிங் பண்ட் ஆகும். ரிலையன்ஸ் மியூச்சுவல் பண்டில் இருக்கும்போது 1000க்கும் அதிகமான கம்பனிகளின் அதிகாரிகளை பார்த்து பேசவும், கம்பெனிகளின் நிலவரங்களை அலசவும், இன்வெஸ்ட்மெண்ட் முடிவுகள் எடுக்கவும் காரணமாக இருந்திருக்கிறார்.

## இவரது குடும்பம் பற்றி

இவரது ஆயா வீட்டு ஐயா பள்ளத்தூர் AM. கதிரேசன் செட்டியார், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் சேர்மன் ஆக இருந்தவர்கள். தந்தையார் கண்டனூர் S.S. அருணாசலம் செட்டியார் அவர்கள், தாயார் சௌந்தரம் ஆச்சி.

மனைவி கல்யாணி. மகள்கள் இருவர். மூத்தவர் பிரியங்கா கதிரேசன், ஆர்கிடெக்ட் படித்து விட்டு தற்போது திருமணத்திற்கு பிறகு அமெரிக்காவில் செட்டிலாகி இருக்கிறார். கணவர் பாலாஜி திருப்பதி மென்பொருள் துறையில் அங்கு பணியாற்றி வருகிறார்.

# ஐ.சி.யூ. வசதிகளை ஏற்படுத்தி தரும் ஸ்டார்ட் அப் "சிபாகா"

இந்தியாவில் 70 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் கிராமப்புறங்களில் வாழ்கிறார்கள். அதே சமயம் 70 சதவீதத்திற்கும் மேலான டாக்டர்கள் நகர்ப்புறத்தில் வசிக்கின்றனர். இந்த இடை வெளியைப் போக்குவதற்காகவும், கிராமப் புறங்களில் மற்றும் சிறு நகரங்களிலும் தீவிர சிகிக்சை பிரிவுகள் (ஐ.சியூ.,) போன்ற சிறந்த வசதிகள் கிடைக்க வேண்டும் என்பதை நோக்கமாக வைத்து ஆரம்பிக்கப்பட்ட ஸ்டார்ட் அப் தான் சிபாகா (CIPACA) என்ற நிறுவனம். தீவிர சிகிச்சை நிபுணத்துவத்தில் சிறந்த மருந்துவரான டாக்டர் ராஜா அமர்நாத் அவர்களால் இந்த ஸ்டார்ட் அப் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டிருகிறது.




தீவிர சிகிக்சை பிரிவு என சொல்லப்படும் ஐ.சி.யூ. படுக்கைகள் இந்தியாவில் 80 சதவீதத்திற்கும் மேலாக நகர்புறத்தில் மட்டுமே இருக்கின்றன. நகரங்கள் இல்லாத இடங்களில் தீவிர சிகிக்சை பிரிவு படுக்கைகளை அங்கிருக்கும் மருத்துவ மனைகளில் நிர்மாணித்து அவற்றை சிறப்பாக பார்த்துக் கொள்வது இந்த ஸ்டார்ட் அப் கம்பெனியின் முக்கியமான குறிக்கோளாகும்.

அந்த ஐ.சி.யூ.விற்கு தேவையான டாக்டர்கள், நர்ஸ், பாராமெடிக்கல் அலுவலர்கள் ஆகியவர் களையும் இந்த கம்பெனி கொடுக்கிறது. இது தவிர அங்கு அனுமதிக்கப்படும் நோயாளிகளை சி.சி.டி.வி., மூலமாக ரிமோட் மானிட்டரிங் செய்து சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவர்களின் ஆலோசனைகள் தேவைப்படுமெனில் அது சம்பந்தமான தேவைகளையும் பூர்த்தி செய் கின்றனர்.

இதுவரை நான்கு மாநிலங்களில் 240 ஐ.சி.யூ. படுக்கைகளை 13 மருத்துவமனைகளில் நிர்மாணித்

திருக்கின்றனர். இதன் மூலமாக 38 ஆயிரத்து 157 நோயாளிகளுக்கு இதுவரை தீவிர மருத்துவ சிகிச்சை வசதிகள் கிடைக்க உதவி இருக்கிறார்கள். இவர்களின் வசதிகள் தற்போது பெரும்பாலும் தமிழ்நாட்டில் தான் இருக்கிறது என்பது குறிப்பிடதக்கது.

இந்த 240 ஐ.சி.யூ. படுக்கைகளும் சென்னைக்கு வெளிப்புறமாக இருக்கும் மருத்துவமனைகளில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் இந்தியாவில் இருக்கும் ஒவ்வொரு தாலுகாவிலும் ஐ.சி.யூ. படுக்கை வசதிகளை அமைப்பது தான் இவர்களுடைய குறிக்கோள். அதாவது அந்த ஊர்களில் இருக்கும் மருத்துவமனையுடன் இணைந்து இந்த வசதி செய்து தருவது தான் இவர்களுடைய நோக்கமாக இருக்கிறது.

முன்னேறிய நாடுகளில் ஒரு லட்சம் மக்களுக்கு 10 ஐ.சி.யூ., படுக்கை வசதிகள் இருக்கும் நிலையில், இந்தியாவில் ஒரு லட்சம் மக்களுக்கு 2.5 ஐ.சியூ., படுக்கை வசதிகள் தான் இருக்கிறது குறிப்பிடத்தக்கது.

தேவைப்பட்டால் வெளிநாடுகளில் இருக்கும் மருத்துவர்களின் உதவிகளும் கிடைப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருகின்றனர். இது தவிர தற்போது அரசாங்க மருத்துவமனைகள் உடன் இணைந்து அங்கும் சிறப்பான ஐ.சி.யூ., மருத்துவ படுக்கை வசதிகளை செய்து தர முன் வந்திருக்கின்றனர்.

சென்னை போன்ற பெரிய நகரங்களில் ஐ.சி.யு., படுக்கை வசதிகள் உள்ள ஒரு நாளைக்கு 60 ஆயிரம் ரூபாய் முதல் ஒரு லட்சம் வரை செலவாகும் நிலையில் இவர்கள் சிறு கிராமங்கள், சிறு நகரநங்களில் அந்த வசதிகளை ஒரு நாளைக்கு 10,000 முதல் 20,000 ரூபாய் அளவில் கிடைக்கச் செய்கின்றனர்.

நோயாளிகள் இவர்களுடைய வசதிகளை எப்படி உபயோகிப்படுத்திக் கொள்வது? பாதிக்கப் பட்ட நோயாளியோ அல்லது அவரது உறவினரோ CIPACA என்ற செயலியை தரவிறக்கம் செய்தால் அதில் அருகிலுள்ள இவர்களின் தீவிர சிகிச்சை பிரிவு இருக்கும் மருத்துவமனை தெரிய வரும். அதன் மூலம் உதவிகளைப் பெறலாம். அல்லது இவர்களுடைய இணையதளத்தில் (www.cipaca.com) உள்ள எமர்ஜென்சி மொபைல் நம்பர்களை தொடர்பு கொண்டால் அவர்களும் வழிகாட்டுவார்கள்.

இரண்டாவது மகள் மீனாட்சி, எலக்டிரானிக்ஸ் மீடியா சயின்ஸ் படித்து விட்டு தற்போது இவர்களின் பெண்கள் பிட்னஸ் தொடர் சங்கிலி உடற்பயிற்சிக் கூடத்திற்கான செயலி (App) உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

மாமனார் கோட்டையூரைச் சேர்ந்த RM. அழகப்ப செட்டியார் அவர்கள். மாமியார் மீனாள் ஆச்சி. தற்போது திருச்சியில் வசித்து வருகிறார்கள்.

**நகரத்தார் இளைஞர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்று கேட்டபோது சில விஷயங் களை கூறினார்.**

தொழிலால் வளர்ந்தோம், தொழிலை மறந்தோம். நகரத்தார்கள் மறுபடி தொழிலுக்கு வர வேண்டும், அது தான் நம்மை உயர்த்தும் என்கிறார்.

ஒரு தொழில் தொடங்குவதற்கு முன்னால் நல்ல ஒரு பிஸினஸ் பிளான் இருப்பது மிகவும் முக்கியம், தொழிலில் லாபங்கள் வரலாம், நஷ்டங்களும் வரலாம்.அதை தாங்கும் மனப் பக்குவம் இருக்க வேண்டும். தொழிலுக்காக கடன்கள் வாங்கும்போது மிகவும் யோசித்து தேவையான அளவு மட்டும் வாங்குவது நல்லது. அதிகப்படியான கடன்கள் தொழிலுக்கு ஆபத்தை கொண்டுவரும் என்று பல யோசனைகளைக் கூறினார்.

புதிதாக தொடங்கப்படும் தொழில்களுக்கு எப்போதும் கட்டாயம் ஒரு வழிகாட்டி தேவை. அவர் நீங்கள் எடுத்திருக்கும் தொழிலை சிறப்பாக கொண்டு செல்லத் தேவையான ஆலோசனைகளை கூறுபவராக இருப்பார் என்றார்.

*இவரைத் தொடர்புகொள்ள:*

*மொபைல் எண்: 98408 99775*

உங்கள் சந்தேகங்களுக்கு எழுதுங்கள் ஈமெயில் Sethuraman.sathappan@gmail.com, மொபைல் 9820451259, இணையதளம் www.startupandbusinessnews.com

**குறைந்த செலவில்**
**நிறைந்த பயன்பெற**
**நமது செட்டிநாடு இதழில்**
**விளம்பரம் செய்யுங்கள்.**
**தொடர்புக்கு: 99622 43750**

# குறள் பாட்டு - 12



குழந்தைக் கவிஞர் செல்லகணபதி

**45. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது.**

அன்புடன் இணைந்த கணவன் மனைவி
அறம்பிச காமல் வாழ்கிற வாழ்க்கை
என்றும் நிலைக்கிற பண்பும் பயனுமாம்
இல்வாழ்க் கையெனில் இஃதுஇல் வாழ்க்கையாம்
அன்பும் அறமும் திகழ்கிற வாழ்க்கையே
அரிய பண்பை பயனைக் கூட்டுமாம்
என்றும் அன்புடன் வாழ்கிற பாங்கினால்
இல்வாழ்க் கைதன் ஏற்றம் கிடைக்குமாம்.

**46.அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின் போஒய்ப் பெறுவது எவன்.**

அறம்பிச காத வாழ்க்கையை நாடி
யாரும் வாழ்ந்திடில் அவர்போய் வேறொரு
நெறியை நெஞ்சில் நினைக்கவும் வேண்டுமோ
நேர்த்தியாய் வாழ்கிற வாழ்க்கை போதுமே
தம்மையும் பிறர்போல் எண்ணித் தீமையை
சற்றும் அவர்க்குச் செய்யாப் பண்புடன்
செம்மையாய் வாழ்க்கையை வாழ்கிற யாரும்
தேடவும் வேண்டுமோ வேறொரு நெறியினை.

**47. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் முயல்வாருள் எல்லாம் தலை.**

அறம்தவ றாமல் வாழ்கிற வாழ்க்கையை
அதுதான் இயல்பென வாழ்பவர் எனில்அவர்
சிறப்புடன் வாழ முயல்பவர் தம்முளே
சிறந்தவர் ஆவார் சிறப்புஅவர் இயல்பு
இயல்பே அறநெறி தவறா வாழ்க்கை
எனநினைப் பவர்கள் நெறியாய் வாழ
முயல்பவர் வரிசையில் சிறந்தவர் ஆவார்
முயற்சியும் வேண்டுமோ அறமே இயல்பெனில்.

**48.ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை நோற்பாரின் நோன்மை உடைத்து.**

அறம்தவ றாத அரிய வாழ்க்கையை
யாரும் வாழ்ந்து மற்றவர் தம்மையும்
அறத்துடன் வாழ அரும்வழி காட்டினால்
அதுவே தவத்தினும் தனிப்பெரும் தவமாம்
தவம்செய் வாரின் தவத்திலும் சிறந்தது
தன்னொடு பிறரையும் அறம்தவ றாமல்
துவளா மனதுடன் வாழச் செய்வது
துல்லிய நோன்பிலும் தூயநோன் பதுவே.

# ஆத்திசூடி - 13

(எளிய விளக்கம்)

- சீத்தலைச் சாத்தன்



**விந்தை விரும்பு**

நல்ல வித்தைகளை (கல்வி, விளையாட்டு, பண்பாடு) கற்றுக் கொள்ள ஆசைப்படு.

**வீடு பெற நில்**

வீடு என்பது ஓய்வுக்கும் நிம்மதிக்கும் உகந்தது. அந்த இன்பம் கிடைக்க, நிலைக்கப் பாடுபடு.

**உத்தமன் ஆக இரு**

நல்ல குணம், பண்பாடுகள் கொண்டவனாக வளர்ந்திடு. வாழ்ந்திடு.

**ஊருடன் கூடிவாழ்**

வீண் சண்டை சச்சரவுகளை வளர்க்காதே. ஊர் மக்களுடன் கலந்து பழகு.

**வெட்டு எனப் பேசேல்**

அடுத்தவர் மனம் வெட்டுப்படும் படி பேச வேண்டாம்.

**வேண்டி வினை செய்யேல்**

அடுத்தவர்க்குத் தீங்கு செய்யாதே.

**வைகறைத் துயில் எழு**

விடியும் முன் எழுந்து பழகு. உன் வாழ்வும் விடியும் பொழுதாகும்.

**ஒன்னாரைத் தேறேல்**

ஒன்னார் என்பவர் புறம் சொல்பவர். அவர் பேச்சை ஒதுக்கு.

**ஓரம் சொல்லேல்**


ஒரு பக்கத்து நியாயம் மட்டும் தெரிந்து, மறு பக்கத்து நியாயம் தெரியாமல் எப்போதும் பேசக்கூடாது. அது ஓரவஞ்சனை ஆகும். எனவே, உத்தமனாகவே இரு.

நிறைவுற்றது


## வாழ்த்துகிறோம்



12th
S. வித்யா லஷ்மி
பெற்றோர்:
PL. சுப்பிரமணியன்
S. ராதா
551 / 600


Maganlal
a precious legacy...

நேசங்களோடு வளர்ந்த பந்தம்...
காலங்களோடு கலந்த பாரம்பரியம்...!




மகன்லால்®
வைரம் & தங்கம்

We Offer Diamonds Graded by GIA®

Authorised Forevermark Jeweller FOREVERMARK

# 51, AVM Building, Kallukatti North, KARAIKUDI - 630 001. PH : 04565 234581/82.
# 27/43, North Usman Rd, T.Nagar, CHENNAI - 600 017. PH : 044 28341333/2888.
www.maganlal.in we@maganlalmehta.com

# பத்திரிகையாளர் ஒக்கூர் சுந்தரம்

**சென்ற மாத தொடர்ச்சி**



**வெற்றியூர் சுப. திருஞானம்**

**"தமிழ்நாடு" பத்திரிகையில் 21 ஆண்டுகள், "நகரத்தார் குரல்" இதழில் 16 ஆண்டுகள், 'ஆச்சி வந்தாச்சு' இதழில் 18 ஆண்டுகள் என தொடர்ந்து 55 ஆண்டுகள் பணியாற்றி சாதனை செய்திருக்கிறீர்கள். அதுபற்றியும் அப்போது தாங்கள் சந்தித்த ஆளுமைகள் பற்றியும் சொல்லுங்கள்.**


'தமிழ்நாடு' எனக்குத் தமிழ்நாட்டில் ஒரு தனி இடத்தைப் பெற்றுத் தந்தது என்றால் 'மீனாட்சி மைந்தன்' திரு. V.N. சிதம்பரம் அவர்கள் ஆசிரியராக இருந்து நடத்திய 'நகரத்தார் குரல்' என்னைப் பிரபலமாக்கியது. என்னைப் பொறுப்பாசிரியர் பதவியில் அமர்த்தி, இதழ் தயாரிப்பில் எனக்குப் பூரண சுதந்திரம் கொடுத்தவர் அவர். எங்கு சென்றாலும் என்னையும் உடன் அழைத்துச் செல்வார். முக்கியமானவர்களை எனக்கு அறிமுகப் படுத்தியவர். அவரும் என் உடன்பிறவாச் சகோதரர்தான். அவரால்தான் உலகம் சுற்றிய தமிழர் திரு. சோம.லெ.அவர்களின் அறிமுகம் கிடைத்தது. 'சோம.லெ.'யின் அறிவுரையை ஏற்று, செட்டிநாட்டுப் பிரபலங்கள் 27 பேரைப் பற்றிய தகவல்களை அரிதின் முயன்று சேகரித்து, மாதம் ஒருவராக 27 மாதங்கள் தொடர்ந்து வெளியிட்டேன். அவர்களுள் சிலர், ராஜா சர் அண்ணாமலை செட்டியார், ராஜா சர் முத்தையா செட்டியார், வள்ளல் அழகப்ப செட்டியார், இராய.சொ., சொ. முருகப்பா, வை.சு. சண்முகம் செட்டியார், பண்டிதமணி, கம்பன் அடிப்பொடி சா. கணேசன், சின்ன அண்ணாமலை, பாகனேரி வித்வான் மு. காசி விசுவநாதன் செட்டியார், கண்ணதாசன், அழ. வள்ளியப்பா, சோம.லெ. போன்றோர். அதற்கு நல்ல வரவேற்பு. இன்று அது நகரத்தார் பற்றி ஆய்வு செய்பவர்களுக்கு நல்லதோர் ஆவணமாகும்.



'ஆச்சி வந்தாச்சு' ஆசிரியர் நாச்சியாபுரம் பழனியப்பன் நல்ல மனிதர். அவர் என் மீது கொண்ட அன்பின் காரணமாகவே என் முதிய வயதிலும் 'ஆச்சி வந்தாச்சு' இதழின் துணை ஆசிரியராகத் தொடர்கிறேன்.

**இன்றையத் திரை பிரபலங்களில் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவராக யாரைத் தேர்வு செய்வீர்கள்?**

திரைப்பட இயக்குநர் SP. முத்துராமன். அவர்களைப் போன்ற எளிமையும், திறமையும் மிக்க மனிதரைக் காண்பது அரிது. அவர் AVM நிறுவனத்தின் செல்லப்பிள்ளை. நேர நிர்வாகத்தில் சிறந்தவர். ஒழுக்க சீலர். லைட் பாய் முதல் கதாநாயக நடிகர் வரை அனைவரிடமும் சரி சமமாகப் பழகக் கூடியவர். அவரது திட்டமிடல், சுறுசுறுப்பு, தொழில் பற்று குறைந்த பட்ஜெட்டில் தரமான படங்களைத் தயாரித்தல், ரஜினி, கமல் போன்றவர்களைப் பட்டைதீட்டி ஒளிரச் செய்த பெருமை என அடுக்கிக் கொண்டே போகலாம்.



நடிகர் திலகம் சிவாஜி கணேசன், தொழிலதிபர் வி.என்.சிதம்பரம் செட்டியார், எஸ்.பழநியப்பன் மற்றும் சிவாஜியைப் பேட்டி கண்ட எல்.சுந்தரம்.

**நீங்கள் பெற்ற விருதுகள்:**

என் எழுத்தாற்றலையும், சேவைச் சிறப்பையும், வெளிப் படைத் தன்மையையும் பாராட்டி, 'சோமலெ.' அறக்கட்டளை சார்பாக திரு.சோம.லெ.சோமசுந்தரம்

# நகரத்தார் மாத நாட்காட்டி 2021 விற்பனைக்கு

நகரத்தார்கள் தங்கள் பிள்ளைகளின் திருமணத்திற்கு, 9 கோயில்களில் அவரவர்களுக்கு உரிய கோயிலில் இருந்து மாலை பெற்று திருமணத்தை நடத்துவது வழக்கமாக உள்ளது. இத்தகைய சிறப்புக்குரிய இத்திருக்கோயில்களில் உள்ள தெய்வங்கள் ஒவ்வொரு நகரத்தார் இல்லங்களையும் அலங்கரிக்கும் வகையில் வண்ணப்படமாக வெளியிட்டுள்ளோம்.

நம் பிள்ளைகளும் நமது கோயில்களைப் பற்றித் தெரிந்து கொள்ள இவை ஏதுவாக இருக்கும். நமது நகரத்தார்கள், இந்த மாத நாள்காட்டியை வாங்கி நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அன்பளிப்பாக வழங்குவது சிறப்பு. நமது நகரக் கோயில்களின் பெருமையை வெளிக்காட்டவும் உதவும்.



பாரதி நிலையம் மற்றும் வசந்தா பிரசுரம் இணைந்து வெளியிட்ட 9 நகர கோயில்கள், கோவிலூர், அரியக்குடி, குன்றக்குடி உள்ளிட்ட 12 கோயில்களை முகப்பாகக் கொண்ட 2021ஆம் ஆண்டு வண்ண மாத நாட்காட்டியை ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர மேலாண்மைக் கழக முன்னாள் தலைவர் லேனா காசிநாதன் அவர்கள் வெளியிட பிரபல ஆர்க்கிடெக்ட் சிவா அவர்கள் பெற்றுக் கொண்டார். பாரதி நிலையம் உரிமையாளர் மணி (எ) சித.பழநியப்பன் மற்றும் வசந்தா பிரசுரம் உரிமையாளர் சுவாமிநாதன் ஆகியோர் உள்ளனர்.

**மாத நாட்காட்டி (காலண்டர்) பெறவும் முன்பதிவு செய்யவும் தொடர்பு கொள்ள:**

சென்னை : பாரதி நிலையம்: மணி (எ) சித. பழநியப்பன், செல் : 93450 87356, வாட்ஸ்அப் : 93812 01678 இமெயில்: bharathenilayam@gmail.com / வசந்தா பிரசுரம் : சுவாமிநாதன், செல் : 90948 75747 ▶ திருச்சி - நாராயணன், செல்: 97879 42774, 90800 03906 ▶ கோவை உஷா 9842027358 ▶ ஈரோடு MR COLOR LAB 0424-2223860 ▶ சேலம் UMAYAL PAPERS 9994050808 ▶ காரைக்குடி : POOCHARAM PRINTS 9585422924, நாராயணன், செல்: 73586 05527 ▶ தேவகோட்டை: GANESH PRINTERS 9842356960 ▶ 9 நகரகோவில்கள் மற்றும் நகரத்தார் சங்கங்களிலும் கிடைக்கும்.

Advt

அவர்கள் 16.02.2003–ல் மதுரையில் விழா எடுத்து, முதல் சோமலெ விருதையும், பொற்கிழியையும், அன்றைய தமிழக சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு கா.காளிமுத்து அவர்கள் வாயிலாக வழங்கினார்.

பாதரக்குடி ஆதீன கர்த்தா தவத்திரு ரவீந்திர சுவாமிகள் 12.01.2014 அன்று நிகழ்ந்த அவரது ஜெயந்தி விழாவில், என் ஆன்மிக, தமிழ்ப் பணியைப் பாராட்டி ‘அருட்பணி அண்ணல்’ விருதையும் வெள்ளி டாலரையும் வழங்கினார்.

**நீங்கள் ஆற்றிய ஆன்மிகப் பணிகள்:**

ஒக்கூர் அருள்மிகு சசிவர்ண விநாயகர் திருக்கோவில் காரியக்காரராக 2015 முதல் 2017 வரை சேவை செய்தேன். மேலும் அக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழா – 1995 மற்றும் 2009 சிறப்பு மலர்களின் பதிப்பாசிரியராகப் பணியாற்றி இருக்கிறேன். ஒக்கூரில் வயிரவன் கோவில் பிரதிநிதியாக 2 முறையும், ஒக்கூர் நகரத்தார் மகேஸ்வர பூஜைப் பொறுப்பாளராக 2 ஆண்டுகளும், காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகப் பொதுக்குழு உறுப்பினராக ஒரு முறையும் சேவை செய்திருக்கிறேன்.

ஒக்கூர் கோவிலில் உள்ள வயிரவ சுவாமிக்கு, வயிரவன் கோவில் பங்காளிகளிடம் நன்கொடை பெற்று, வெள்ளி அங்கி செய்து என் தலைமையில் விழா எடுத்து சுவாமிக்கு சாத்துபடி செய்தோம்.

**நூல்கள் நன்கொடை வழங்கியது:**

55 ஆண்டுகளாக நூற்றுக்கணக்கான நூல்களை நான் வாங்கி சேகரித்து வைத்திருக்கிறேன். அவற்றில் சிதம்பரத்தில் செயல்படும் பதிப்புச் செம்மல் ச.மெய்யப்பனாரின் தமிழ் ஆய்வகத்துக்கு ஏராளமான நூல்களையும், திருச்செந்தூர் நகர விடுதிக்கு, வலையபட்டி திரு.S.M.நடராஜன் செட்டியாரின் வேண்டுகோளின்படி 200 நூல்களையும், நான் தொகுத்த மலர்களையும் நன்கொடையாக வழங்கியிருக்கிறேன்.

**இளைஞர்களுக்கான தங்கள் செய்தி:**

இன்றைய இளைஞர்கள் மிகுந்த அறிவாற்றல் உடையவர்கள். வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தை விரல் நுனியில் வைத்திருப்பவர்கள். இளம் வயதிலேயே பொருளும், புகழும் ஈட்டி வருபவர்கள். அவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, நேரத்தை வீணாக்காதீர்கள். நிறையப் படியுங்கள், பெரியவர்களை மதிப்புடன் நடத்துங்கள், வாழ்க்கைத் துணையிடம் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். நகரத்தார் என்னும் பெருமைக்குரியவர்கள் நாம் என்பதை மறந்து விடாதீர்கள். ■

# நகரத்தார் சிகரத்தார் 61



காரைக்குடி நாராயணன்

ராஜ்மோகன் இந்துமத அபிமான சங்கத்தைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார்.

ஆச்சி. மொதல்ல இந்துமத அபிமான சங்கத்தை சி.மெ. வகைக்கு சொந்தமான நந்தவனமா இருந்த திருவாசக மடத்தில ஆரம்பிச்சிருக்காங்க. சீர்திருத்த முன்னோடியா இருந்த சொ. முருகப்பா, தமிழ்க்கடல் ராய. சொ., கானாடுகாத்தான் வை.சு. சண்முகனார், அமராவதிபுதூர் பிச்சப்பா சுப்பிரமணியம், இன்னும் சில முக்கியமான பிரமுகர்கள் சேர்ந்து இந்த சங்கத்தை ஆரம்பிச்சிருக்காங்க. சில காலங்கள் அங்கேயும் இங்கேயும் வாடகைக்கு இருந்த சங்கம் 1952-ல நகரச் சிவன் கோவிலுக்கு பக்கமாக, குளத்தை ஒட்டி சொந்தமா ஒரு கட்டடத்தை உருவாக்கிடுச்சு.

அவ்வப்போது ராஜ்மோகன் அவர் எழுதி வைத்திருந்த குறிப்புகளைப் பார்த்தார்.

இங்கே சட்டை போடாத தியாகி சா. கணேசன் போல பெருமைக்குரிய நகரத்தார்கள் அவுங்களுக்கு பயிற்சி தந்த பாசறையா வச்சுக்கிட்டாங்க. இங்கே திருக்குறள், ராமாயண வகுப்பெல்லாம் நடந்திருக்கு. இதுல பெரிய நூலகமும், வாசகர் வந்து படிக்குற படிப்பகமும் இருந்திருக்கு. எத்தனையோ இலக்கியக் கூட்டங்கள் விடாம நடந்திருக்கு. இது விடுதலைப் போராட்ட வரலாற்றில மறக்க முடியாத அடையாளமா இருந்திருக்கு. இங்கே காந்தி வந்த போது அவருக்கு கதர்த் துணியில தமிழ்ல அச்சடிச்சு வரவேற்புப் பரிசு கொடுத்திருக்காங்க. அந்த நினைவுப் பரிசு இன்னமும் டெல்லியில உள்ள காந்தி நினைவு பொருட்காட்சிநிலையத்தில இருக்குதாமே..

ராஜ்மோகன் சொல்லச் சொல்ல ஆச்சி அதைத் தலையாட்டிப் புன்னகைத்து ரசித்தார். செட்டியார் வெத்திலை போட முடியாமல் தவித்தார். ராஜ்மோகன் தொடர்ந்தார்.

வ.வே.சு. ஐயர், சுப்பிரமணிய சிவா போன்ற விடுதலைக்குப் பாடுபட்ட விவேகிகள்லாம் வந்து சுதந்திர தாகத்தைப் பத்தி பேசியிருக்காங்க. எல்லாத்துக்கும் மேல மகாகவி பாரதியார் வந்து மூன்று, நான்கு நாட்கள் இங்கே தங்கியிருக்குறாரு. சொற்பொழிவு செஞ்சிருக்காரு. அவரோட அரிய புகைப்படங்கள்ல ஒன்னா இந்த சங்கத்தில எடுத்த புகைப்படத்தை ஒரு பொக்கிஷமா சொல்றாங்களே. பாரதியார் நாட்டுப்பற்றுக்கும், மொழிப்பற்றுக்கும் எத்தனையோ பாடல்கள் பாடியிருக்காரு. ஒரு தனிப்பட்ட நகரத்தார் சமூகத்தை தவிர சமூகத்தை அவரு புகழ்ந்து பாடலேங்குறதே இந்த சங்கத்தோட பெரிய சிறப்பு.

ஆச்சி மத்தியில் கேள்வி கேட்டார்.

தம்பி. அந்த பாடலைச் சொல்றீங்களா.

மன்னிச்சுக்குங்க ஆச்சி. நான் எடுத்திட்டுப் போன டைரியில இடம் இல்லை. எழுதாம வந்திட்டேன்.

நான் சொல்றேன். இப்போ எழுதிக்குங்க.

ஆச்சி பாரதியார் பாடிய பாடலைச் சொன்னார்.

உண்மையே தாரகமென் றுணர்ந்திட்டார்
 அன்பொன்றே உறுதி யென்பார்
வண்மையே குலதர்ம மெனக்கொண்டார்
 தொண்டொன்றே வழியாக் கண்டார்
ஒண்மையுயர் கடவுளிடத் தன்புடையார்,
 அவ்வன்பின் ஊற்றத் தாலே
திண்மையுறும் ஹிந்துமத அபிமான
 சங்கமொன்று சேர்த்திட் டாரே



பல நூல்கள் பதிப்பித்தும், பலபெரியோர்
பிரசங்கம் பண்ணு வித்தும்
நலமுடைய கலாசாலை புத்தகசா
லைபலவும் நாட்டி யுந்தம்
குலமுயர நகருயர நாடுயர
உழைக்கின்றார், கோடி மேன்மை
நிலவுற இச் சங்கத்தார் பல்லூழி
வாழ்ந்தொளிர்க, நிலத்தின் மீதே!

ஆச்சி சொல்லி முடித்தார். ராஜ்மோகன் அவர் நினைவாற்றலைப் புகழ்ந்து தள்ளினார். செட்டியார் பொறாமையுடன் பொய்யாக இருமினார்.

நான் சொல்ல வாயெடுத்தேன். ஆச்சி முந்திக்கிட்டா.

ஆச்சி செட்டியாரை பொய்க் கோபத்துடன் பார்த்தார்.

செட்டியார் நெளிந்தார். ஆச்சி கோபத்தை ரசித்தார்.

ஆச்சிக்கும் செட்டியாருக்கும் உள்ள அன்யோன்யம் ராஜ்மோகனை ஆச்சர்யப்பட வைத்தது.

டைரக்டர் தம்பி... ஒன்னைச் சொல்லியே தீரணும். செட்டியார் என்னைவிட ஆன்மிகத்தில அசத்திடுவாக. அதுக்குக் காரணம் தம்பி, பொதுவாகவே நகரத்தார்கள் தெய்வத்தை ரொம்ப நம்புறவக. யோசிச்சுப் பாருங்க. ஒவ்வொரு தெய்வத்தோடவும் ஒவ்வொரு மிருகமோ, பறவையோ இருக்கும். வினாயகர் யானை. யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன். மனுஷங்க வாழ்ற போதும் வாழ்ந்து மறைஞ்ச போதும் அதுபோல இருக்கணும். முருகன் சேவல். சேவல் கூவி விடிகின்ற ஒவ்வொரு விடியலும் நமக்குன்னு நம்பணும். சிவன் காளை. காளை மாடா உழைக்கத் தயாரா இருக்கணும். பைரவர் நாய். விசுவாசமே சுவாசம்னு நெனைக்கணும். சனி காக்கை. ஒற்றுமையா வாழணும். சரசுவதி படிப்பு, லட்சுமி செல்வம், பார்வதி பாசம், அன்னபூரணி – உணவு. இப்படி மனுசங்களோட எண்ணங்கள் தெய்வங்களோட ஐக்கியமாகணும். எங்கப்பச்சி தினமும் ராமாயணம் படிக்கச் சொல்லுவாக. அதெப்படி தினமும் படிக்க முடியும்னு கேட்டேன். அவுக சொன்னதைக் கேட்டு ஆச்சர்யப்பட்டு, அவுக சொன்னபடி ராமாயணம் தினமும் படிக்குறேன்.

அப்படியா, எப்படி முடியுது.

ராஜ்மோகன் ஆச்சர்யத்துடன் கேட்டார்.

காஞ்சிப் பெரியவர் ராமாயணத்தை ஒம்பதே வரிகள்ல முப்பது வினாடிகள்ல படிக்கச் சொன்னதை எங்க அப்பச்சி சொன்னாக.

அய்யா அதைச் சொல்லுங்க.

ஸ்ரீராமன் ரகு குலதிலகம்
சிவதனு சாக்ரஷத சீதாஹஸ்தகரம்
அங்குல்யா பரண சோபிதம்
சூடாமணி தர்சனகரம்
ஆஞ்சநேய மாஸ்ரயம்
வைதேஹி மனோகரம்
வானர சைன்ய சேவிதம்
சர்வமங்களா கார்யானுகுலம்
சத்தம் ஸ்ரீ ராமச்சந்திர பாவயமாம்
ஸ்ரீராம் ஜெய்ராம் ஜெய்ஸ்ரீராம்

செட்டியார் முழு ராமாயணத்தையும் அரை நிமிடத்தில் சொல்லி முடித்தார்.

அய்யா... நீங்களும் ஆச்சியும் ஒருத்தருக்கொருத்தர் சளைச்சவங்க இல்லே.

தம்பி... எங்கேயெல்லாம் யாத்திரை போறோமோ அங்கேயெல்லாம் நகரத்தார்களுக்கு கோயில்கள் மட்டுமில்லே, நகர விடுதிகளும் இருக்கு. நாங்க ஹோட்டல் அது இதுன்னு அலைய வேண்டிய அவசியமே இல்லை.

அயோத்தி, அலகாபாத், கயா, காசி, கல்கத்தா, இராமேசுவரம், எட்டுக்குடி, நாசிக், காவிரிப்பூம் பட்டினம், கோயமுத்தூர், சிதம்பரம், சுவாமிமலை, தஞ்சாவூர், தலைக்காவேரி, தாரகேஸ்வரம், திருக்கடவூர், திருச்சி, திருச்செந்தூர், திருத்தணி, திருநெல்வேலி, திருப்பரங்குன்றம், திருப்போரூர், திருவண்ணாமலை, திருவாரூர், திருவாலங்காடு, திருவொற்றியூர், பழனி, புதுக்கோட்டை, பெரிய நயினார் கோவில், மயிலாடுதுறை, மைலம், கும்பகோணம், வைத்தீஸ்வரன் கோவில், ஆவுடையார் கோவில், சென்னை.

செட்டியார் வாய்ப்பாட்டை ஒப்புவிப்பது போல சொல்லி முடித்தார்.

அய்யா, இந்துமத அபிமான சங்கம் மாதிரி வேற சங்கங்கள் இருக்கா?

பொள்ளாச்சி தமிழ்ச் சங்கம், தேவகோட்டை வெள்ளையப்பன் 25 ஆண்டுகளுக்கும் மேல செயலாளரா இருந்து நடத்தி வந்த பிரபலமான சங்கம். இங்கே எத்தனையோ நாடகங்கள், இசைக் கச்சேரிகள் நடந்திருக்கு, இந்த சங்கத்தை சிறந்த சங்கம்ன்னு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் கௌரவிச்சிருக்கு. மயிலாப்பூர் அகாடெமியும் பரிசு வழங்கிப் பாராட்டி இருக்கு.

ஆச்சி எழுந்து நின்றதும் சபை கலைந்தது.

(தொடரும்)








**S.K.சம்யுக்தா** 5–ஆம் வகுப்பு
Sri Sathya Sai Institute of Education, Chennai
பெற்றோர்: செந்தில் குமார் - விசாலாட்சி

**KR. விஸ்வா கருப்பையா**
கிரேடு – 1, Lincoln Elementary School,
New Jersey (U.S.)
பெற்றோர் : R. கருப்பையா - KR. கல்யாணி










**K.G. சாய் திவ்ய தர்ஷிணி**
6–ஆம் வகுப்பு, Shemford
Futuristic School, Chidambaram
பெற்றோர் : K.ஞானபிரகாசம் - G.பிரியா



**S. சந்தியா செந்தில்குமார்**
3–ஆம் வகுப்பு Vibgyor School,
Thubrahalli, Bangalore.
பெற்றோர் : செந்தில் குமார் - S. சொர்ணம்







**S. அபிநவ் மெய்யப்பன்**
4–ஆம் வகுப்பு
டெல்லி பப்ளிக் ஸ்கூல், குவைத்
பெற்றோர் : M. சரவணன் - சிவகாமி





**PL. கார்த்திகா (எ) கருப்பு** L.K.G.
CVCTC மீனாட்சி ஆச்சி மெட்ரிக்குலேஷன் பள்ளி,
கானாடுகாத்தான்
பெற்றோர் : M. பழனியப்பன் - SP.கண்ணாத்தாள்

## வாழ்த்துக்கள்

தர்மபுரியில் வசிக்கும் காரைக்குடி, மாத்தூர் – அரும்பாக்கூர் பிரிவைச் சேர்ந்த PL. அழகப்பன் – சொர்ணவள்ளி ஆச்சியின் மகள், திரு. AL. PL. பழனியப்பன் செட்டியார் – திருமதி அலமேலு ஆச்சியின் மகன் வழிப் பேத்தி, சண்முகநாதபுரம் (ஆராவயல்) திரு.பெ.சித.பெ.மு. சேவுகன் செட்டியார் – மீனாட்சி ஆச்சி மகள் வழிப் பேத்தி செல்வி AL. மீனாட்சி நீட் தேர்வில் 632 மதிப்பெண்கள் பெற்று சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்துள்ளார். ஜிம்னாஸ்டிக், ஸ்கேட்டிங் விளையாட்டுகளில் ஆர்வமும், ஓவியம் வரைவதில் திறமையும் கொண்ட செல்வி AL. மீனாட்சிக்கு நமது செட்டிநாடு வாசகர்கள் சார்பாக வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கிறது.



# பன்னிரு ஆழ்வார்கள் ஓர் அறிமுகம்

## 5. குலசேகர ஆழ்வார்



பள்ளத்தூர்
பழ.பழனியப்பன்

குலசேகர ஆழ்வார் சேர நாட்டைச் சார்ந்த கொல்லிமலை (வஞ்சிக்களம்) என்னும் நகரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்த “த்ருடவிரதன்” என்ற அரசனுக்குப் புதல்வராகப் பிறந்தவர். இவர் ஒரு அரசகுமாரர், இவர் காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டு. ஒரு பராபவ ஆண்டு மாசித் திங்கள் புனர்பூச நட்சத்திரத்தில் அவரித்தார் என்று கூறுவர். இவர் தனது இளவரசுக் காலத்திலேயே மூவேந்தர்களையும் வென்று கொல்லி காவலன், கொல்லி நகர்க்கு இறை. கூடல் நாயகன், கோழிக்கோன், கொங்கர்கோன், குலசேகரன் என்றும் வழங்கப்பட்டு வந்தார். இவருக்கு “இளை” என்ற ஒரு மகளும், ஒரு மகனும் பிறந்தனர். இல்லற வாழ்வு இனிதாய்க் கழிந்தது. இவர் இராமயணக் காலட்சே பங்களை ஆர்வத்துடன் கேட்டுச் சுவைப்பவர். வைணவ அடியார்களிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டு அவர்களைப் புரந்து வருவதில் பெரும் மனநிறைவு பெற்றவர்.



இராமாயணக் காலட்சேபங்களைச் செவிவழியாகக் கேட்டுக் கொண்டிருக்கும் போதே, தன்னையே இராமனாகப் பாவித்து, பெருஞ்சேனைகளுடன் புறப் பட்டுப் போய் விடுவார். பின்னர் உபன்னியாசம் செய்பவர் சாதுர்யமாக இராமன் வெற்றி பெற்று விட்டான் என்று சொல்லி அவருடைய ஆக்ரோக்ஷத்தை அடக்கி விடுவார். அப்போது இராமபிரான் இலக்குமி இலக்குவனோடு காட்சி தந்தார் என்றும் கூறுவதுண்டு. இதுபோலப் பலமுறை நிகழ்ந்ததுண்டு என்றும் கூறுவர்.

இராமாயணம் தவிர, இராமாயணம் அரங்கேறிய திருவரங்கத்துத் திருவரங்கனிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அரச போகத்தைத் துறந்து, திருவரங்கத்திலேயே இருந்து வாழ வேண்டும் என்ற பேரார்வம் கொண்டவர். எனவே திருவரங்கத்துக்குச் செல்ல ஏற்பாடு செய்தார்.

இதனையறிந்த அமைச்சர் பெருமக்கள் இவர் திருவரங்கம் சென்றால் திரும்ப வரமாட்டார், அங்கேயே தங்கிவிடுவார், இங்கே அரசாட்சி ஸ்தம்பித்துவிடும் என்று கருதினர். எனவே அரசர் திருவரங்கம் புறப்பட எத்தனிக்கும் போதெல்லாம் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி அவரைத் திருவரங்கம் செல்ல விடாமல் தடுத்து வந்தனர். இவருடைய அரண்மனைக்குள் வைணவ ஆசார்யர்கள் எல்லா இடத்திற்கும் செல்லும் ஒரு பெரிய அனுமதியையும் வழங்கி இருந்தார். இந்தச் செயல் அமைச்சர்களுக்குப் பிடிக்காமல் போகவே, வைணவ ஆசார்யர்களிடத்து அரசனுக்கு மனத்தாங்கலை ஏற்படுத்த வேண்டும் என்று கருதி, ஒரு ராமநவமி அன்று கண்ணனுக்கு அணிவிக்க வேண்டிய விலையுயர்ந்த இரத்தின மாலையை மட்டும் எடுத்து ஒளித்து வைத்து விட்டனர்.

வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்த கோயில் அர்ச்சகர் விலை மதிப்புள்ள ஒரு அணிகலனைக் காணவில்லை என அரசனிடம் தெரிவித்த போது, அமைச்சர்கள், வைணவ ஆசார்யர்கள் தான் அரண்மனைக்குள் எல்லா இடங் களுக்கும் சென்று வரும் அனுமதி பெற்றிருக்கிறார்கள், அவர்களில் யாரேனும் ஒருவர் இந்நகையை எடுத்திருக்க வாய்ப்பு உண்டு என அரசரிடம் தெரிவித்தனர். அவர்கள் அதற்கு ஒரு உபாயமும் எடுத்து உரைத்தார்கள். ஒரு குடத்திற்குள் நல்ல பாம்பை விட்டுவிட வேண்டும். ஒவ்வொருவராக அந்தக் குடத்திற்குள் கையை விட வேண்டும். குற்றம் செய்திருந்தால் அந்தப் பாம்பு அவர்களைக் கடித்து விடும் என்றும் கூறி யிருந்தார்கள்.

ஆனால், அரசன் வைணவ ஆசார்யர்களை இந்தச் சோதனைக்கு உட்படுத்த விரும்பவில்லை. எனவே தானே அந்தக் குடத்திற்குள் கைவிடப் போவதாகவும், அவ்வாசார்யர்கள் இந்தக் குற்றத்தைப் புரிந்திருந்தால் பாம்பு என்னையே கடிக்கட்டும் என்றும் கூறி, தானே குடத்திற்குள் கைவிட முயன்றார். சூழ்நிலை தாங்கள் நினைத்தபடி நடவாமல் தங்களுக்கே இன்னல் விளைவிக்கும் என்று கருதிய அமைச்சர்கள், அரசனைத் தடுத்து நிறுத்தி நிகழ்ந்ததனைத்தும் கூறி மன்னிக்கவும் வேண்டினர். இந்த நிகழ்வை நாதமுனிகளின் சிஷ்யர் மணக்கால் நம்பி என்பவர் ஒரு தனிப் பாடலாக எழுதியிருக்கிறார் என்பதும் இங்கு கருதத்தக்கது.

இத்தகைய பொய்ம்மையும். சூழ்ச்சியும் நிறைந்த அமைச்சர்களையும், அரசாட்சியையும் துறந்து விட வேண்டும் என்று மனத்துள் கருதி தன் மகனுக்கு முடிசூட்டி, திருவரங்கத்தையே தன் வாழிடமாகக் கொண்டு அங்கேயே வசித்து வரலானார். நீண்ட நாள்முயன்று திருவரங்கத் திருக்கோயிலின் மூன்றாம் பிரகாரத்தை 'சுற்றை' தானே முன்நின்று கட்டுவித்தார். எனவே இன்றும் அது "குலசேகரன் பிராகாரம்". "குலசேகரன் வீதி" என்றும் வழங்கப் பட்டு வருகிறது. தன் மகள் இளையை சேர வில்லியை அரங்கனுக்கே மணம் செய்து கொடுத்தார் என்றும் ஒரு செவிவழிச் செய்தி உண்டு.

இவர் திருவரங்கப் பணிகள் ஆற்றி முடித்து திருவேங்கடம், திருசித்திரகூடம், திருக்கண்ணபுரம், திருவித்துவக்கோடு, திருக்குருகூர் முதலிய திருத்தலங்களுக்கும் சென்று அங்கங்கும் இறைப் பணிகள் செய்து வந்தார். திருக்குருகூரில் நம்மாழ்வாரைத் தரிசிக்கும் பேறு பெற்றார். பிரம்மதேசம் என்றழைக்கப்படும் மன்னார்குடி சென்று அங்கேயே தனது 67-ம் அகவையில் பரமபதம் அடைந்தார் என்று அவரது வாழ்க்கைச் சரித்திரம் மூலம் அறிகிறோம். சிதம்பரத்தில் நடராசர் சன்னிதிக்கு எதிரே உள்ள பெருமாள் சந்நிதிதான் ஆழ்வார்கள் பாடல்களில் திருச்சித்திர கூடம் என்று வழங்கப்படுகிறது.

தான் செல்லும் இடங்களிலெல்லாம் எழுந்தருளி யிருக்கும் பெருமாளைப் பாடித் துதித்தவராதலால் இவர் இயற்றிய பாசுரங்களும் "பெருமாள் திருமொழி" என்றே தொகுக்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர "முகுந்தமாலை" என்ற ஒரு வடமொழி நூலும் இவர் பாடியதாகக் கூறப்படுகிறது. பெருமாள் திருமொழி பத்துப் பதிகங்களில் 105 பாடல்களைக் கொண்டது. முப்பது பாடல்கள் திருவரங்கனைப் பற்றியது. பத்து பாடல்கள் உத்தர காண்டம் அடங்கிய இராமாயணம் பற்றியது. பத்துப் பாசுரங்கள் திருவேங்கடத்தானைப் பற்றியது. பத்துப் பாசுரங்கள் வித்துவக்கோட்டில் எழுந்தருளி யிருக்கும் பெருமாளைப் பற்றியது.

வித்துவக்கோடு எங்கிருக்கிறது என்பது பற்றி பல ஆராய்ச்சிகள் உள்ளன. தற்காலத்தில் அதைக் கேரளத்தில் உள்ள பட்டாம்பியிலிருந்து 1 மைலில் இருக்கிற உய்யவந்த பெருமாள் என்கிறார் சுஜாதா.

இவர் பாசுரங்களில் திருவரங்கத்து அரங்கனும், திருவேங்கடத்தானும், வித்துவக் கோட்டு அம்மானும் பெரிதும் பாடப் பெற்றுள்ளனர். ஈன்றெடுத்த தேவகிக்கு கிடைக்காத சிலபேறுகள் வளர்த்தெடுத்த யசோதைக்குக் கிடைத்தனவே என்று தேவகி புலம்பும் பாசுரங்களும் பல உண்டு. இராமாவதாரக் காட்சிகளையும் தன் பெருமாள் திருமொழியில் குலசேகராழ்வார் பெரிதும் ஈடுபட்டுப் பாடியுள்ளதையும் காணலாம்.

இவர் திருவேங்கடத்து எம்பிரான் மேல் மிகுந்த பக்தி கொண்டவராகத் திகழ்ந்தார். தான் பெற்ற பிறவிக்கு ஒரு பயன் உண்டாக வேண்டும் என்றால், தான் திருவேங்கடத்தில் அடியவர்கள் நடந்து செல்லும் ஒரு படியாகவாவது கிடக்க வேண்டும் என்று திருவேங்கடத்தானிடம் அருள் பாலிக்க வேண்டுதல் செய்து கொண்டவர். அவர் வேண்டுதலுக்கு இறைவன் இசைந்தது போல இன்றும் எல்லாப் பெருமாள் கோயில்களிலும், அடியவர்கள் ஏறுகின்ற முதற்படி "குலசேகரன்படி" என்றே வழங்கப்படுதல் காணலாம். இவர் அரசாட்சியைத் துறந்து சென்றமையால் இராம பிரானுக்கும், தன் மகள் சேரவில்லியைத் திருவரங்கனுக்கு மணம் முடித்துக் கொடுத்ததால் விஷ்ணு சித்தர் என்னும் பெரியாழ்வாருக்கும் ஒப்பாகிறார் என்றும் கூறுவர்.

ஆழ்வார்கள் குலத்திற்குச் சேகரர் ஆனபடியால் குலசேகராழ்வார் எனக் கீர்த்தி பெற்றார் என்று பெயர்க்காரணம் கூறுகிறார் பெரிய வாச்சான் பிள்ளை. ஆனால் இவருடைய தந்தை த்ருடவிரதன் இவருடைய முகப்பொலிவைக் கண்டு தன் குலத்துக்கே சிரோன்மணியாய் இவன் இருப்பான் என்று உணர்ந்து. இவருக்கு "குலசேகரன்" என்று பெயர் இட்டான் என்றும் கூறுகிறது ஒரு உரை நூல். இறைவனையே வேண்டி நினைந்துருகுபவர் களுக்கும், செல்வத்தை வேண்டாதிருப்பவர் களுக்கும் செல்வம் தானாக வந்து சேரும் என்பது இவருடைய பாசுரங்களில் காணக்கிடைக்கும் ஒரு சிறப்பு.

(தொடரும்)

# நிலம் நன்கொடை



இளையாற்றங்குடி கோவில் பட்டினசாமி பிரிவைச் சேர்ந்த புதுவயல் பெ.ப.வ.சித.பழ. சிதம்பரம் செட்டியார் அவர்களின் மகன் சி.பழமலை கண்ணன். இவரது மனைவி பார்வதி, காரைக்குடி S.L.N. நாராயணன் செட்டியார் அவர்களின் மூத்த மகள். இவர்களுக்கு இரண்டு மகள்கள். மூத்தவர் கட்டிடக்கலை வல்லுநர் லலிதா, இளையவர் பல் மருத்துவர் டாக்டர் உமா. இவர்களது முன்னோர் விருத்தாசலம் கோவிலில் தர்ம காரியங்கள் மற்றும் திருப்பணி செய்தவர்கள்.

நல்ல பொது செயல்களுக்கு கொடையளிப்பதில் முன்னிற்கும் குடும்பப் பின்னணியிலிருந்து வந்த கண்ணன் – பார்வதி குடும்பத்தினர், காவேரி, வைகை, குண்டாறு ஆகிய நதிகளை இணைக்கும் திட்டத்தை உள்ளடக்கிய புதுக்கோட்டை மாவட்டத்தின் நூற்றாண்டு கனவு திட்டமான காவிரி நீரை கால்வாய் வழியே கொண்டு வந்து வேளாண் பணிகளுக்கு பயன்படுத்தும் திட்டத்தை நிறைவேற்ற, புதுக்கோட்டை மாவட்டம் நாகமங்கலம் – குன்னத்தூர் – திருச்சி மாவட்ட எல்லையில் அமைந்துள்ள தங்களுக்குச் சொந்தமான நிலத்தில் 19.5 ஏக்கர் நிலத்தை அரசுக்குத் தானமாக வழங்கியுள்ளார்கள். தானம் வழங்கும் நிகழ்வில் தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் திருமதி உமா மகேஸ்வரி இ.ஆ.ப., ஆகியோரால் கொடையாளர்கள் சான்றிதழ் வழங்கி, பொன்னாடை அணிவித்து பாராட்டப் பெற்றனர்.



பெரி.முத்துராமன்



## மனம் மணம் மந்திரம் 11

சும்மாயிருக்க, சொல்லற மனோ வேகம் கெடும். வாழ்வு மிகுத்து வரும் என்று கூறியிருந் தோம். முயன்று பார்த்தீர்களா?

இந்த மனோ வேகத்தில் நாம் பலரையும் குறை காண்கிறோம். உதாரணத்துக்கு என்னையே எடுத்துக் கொள்வோமே! இருபது ஆண்டுகளுக்கு முன், ஒரு புதிய நாட்டில் மீண்டும் ஓட்டுனர் உரிமம் பெற தேர்வுக்குச் சென்று மீண்டும் மீண்டும் தோல்வி அடைகிறேன். அதற்குப் பல காரணங்கள் உண்டு. முக்கியமான ஒரு காரணம், பல ஆண்டுகள் கேட்போம் என்று முடிவு செய்து கொண்டேன். பல சுற்றுகளுக்குப் பிறகு, ஒரு வழியாக அங்கிருந்து வேறு திசையில் என்னை ஓட்டச் சொன்னார். அப்போது அவர் சொன்ன வார்த்தைகள் என் மனதில் ஆழப் பதிந்தன. சைவ சித்தாந்தம் கற்ற போது, விளங்காத பொருளை அவர் வார்த்தைகள் எனக்கு உடனடியாக விளக்கின. அவர் சொன்னது இவ்வளவுதான். இப்போது தான் ஒழுங்காக இடதுபுறம் திரும்ப கற்றுக் கொண்டிருக்கிறீர்கள். இப்போது நாம் நேராக செல்லலாம்.

# குன்றே அனைய குற்றங்கள் என்று தீரும்?

இந்தியாவில் இடது பக்கம் ஓட்டிப் பழகி, புதிய நாட்டில் வலது பக்கம் ஓட்ட வேண்டியிருந்ததே! ஓட்டும்போது, தேர்வாளர் அருகில் இருக்கும் போது, இந்த – வலது இடது – சந்தேகம் வந்துவிடும். பிறகென்ன? மீண்டும் பயிற்சி எடுத்துக் கொண்டு தேர்வுக்கு வர வேண்டியிருக்கும். எனக்கு கோபம் கோபமாக வரும். பயிற்றுவித்தவர்களின் மேலும் கோபம் வரும். பயிற்றுவித்த ஓட்டுனர்கள் பலரை மாற்றியிருக்கிறேன். பயிற்றுவிக்க அப்போது சன்மானம் ஒரு மணி நேரத்திற்கு 25 டாலர்கள். நான் கார் பயில கொடுத்த காசுக்கு, ஒரு நல்ல காரே வாங்கியிருக்கலாம்.

ஒரு சமயம், சொல்லிக் கொடுப்பவர் மேல் கோபம் வர, பாதியிலே காரை நிறுத்தச் சொல்லிவிட்டு அவருக்குரிய சன்மானத்தை கொடுத்துவிட்டு வீட்டுக்கு நடந்து வந்த நாளும் உண்டு. பிறகு அடுத்த ஓட்டுனர் பயிற்சியாளரை தேர்ந்தெடுத் தேன். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் பாபு. இனிய முகத்தவர். பொறுமைசாலி. ஒருமுறை இவர் எனக்கு சொல்லிக் கொடுக்கையில், ஒரு குடியிருப்பு பகுதியில் ஒரு சதுரம் பட, வலது இடது, வலது இடது என்று திரும்பத் திரும்ப ஒரே பகுதியை வெகு நேரம் சுற்றி வரச் செய்தார். நேரம் சென்று கொண்டிருந்தது. மனதில் நான் நினைத்தேன்: ஒரு மணி நேரத்திற்கு 25 டாலர் நான் கொடுக்கிறேன். அப்படியிருக்கையில் அடுத்த பகுதிக்கு ஓட்டச் சொல்லாமல், பழகிய பகுதியிலேயே திரும்பத் திரும்ப போகச் சொல்லி நேரத்தை வீணடிக்கிறாரே என்று சற்று வருத்தமாக இருந்தது. கோபம் கூட வந்தது. ஆனால், மனோ வேகத்தை குறைத்துக் கொண்டு அவர் சொல்வதைக்

இதற்கும் சைவ சித்தாந்தத்திற்கும் என்ன சம்பந்தம் என்கிறீர்களா? சொல்கிறேன். (அந்த முறை ஓட்டுனர் தேர்விலும் வெற்றி பெற்றேன்)

சரி, சைவ சித்தாந்தத்திற்குள் செல்லும் முன் விரைவாக சில திருவாசக வரிகளைப் பார்ப்போமா!

**“குன்றே அனைய குற்றங்கள் குணமா மென்றே நீகொண்டால்**
**என்றான் கெட்ட திரங்கிடாய் எண்தோள் முக்கண் எம்மானே.”**

அதாவது, குன்றளவு குற்றங்கள் செய்தாலும், குணமாகக் கொள்ள வேண்டுமென்று முக்கண் முதல்வனை வேண்டுகிறார் மாணிக்கவாசகர். அப்போதுதானே பிறவி என்னும் பெருங்கடலை கடக்கும் தேர்வில் நாம் தேற முடியும்.

சைவ சித்தாந்தத்தில் நான் கற்றது இதுதான்: “நாம் நம்மை செம்மைப்படுத்திக்கொள்ள இந்த பூமிக்கு வந்திருக்கிறோம். நமக்கு வரும் நிகழ்வுகள் (துன்பங்கள்) நம்மை செம்மைப்படுத்த வருகின்றன. நாம் அவற்றை விளங்கிக் கொள்ளும் வரை அவை தொடரும். இதுவும் இறைவனின் கருணையே. மறக்கருணை இது.”

இதை அழகாக விளக்குகிறது, வெகுநாட் களுக்கு முன், செய்தித்தாள் ஒன்றில் நான் படித்த இந்தக் கதை:

“பால் பசுவின் மடியில் சந்தோஷமாக இருந்தது. அதை பால் விற்கும் பெண் ஒருவர் கறந்து அடுப்பில் வைத்து கொதிக்க வைத்தார். பால் கொதித்தது. சூடு தாங்காமல் துடித்தது. வாய்விட்டு புலம்பியது. இறைவா எனக்கேன் இவ்வளவு சோதனை என்றது.




ஆனால், அந்தப் பெண்ணோ பாலை விடுவதாக இல்லை. பாலை அடுப்பிலிருந்து இறக்கி அதனுடன் புளித்த மோரை கலந்தார். அந்த வாடை பொறுக்க முடியாமல் இருந்தது. அதன் பின்பு பால் கட்டியாகி தயிராக மாறியது. திடமான அந்த தயிரை ஒரு மத்தை கொண்டு கடைந்தார். வலி தாங்காமல் தயிர் அலறியது. அதிலிருந்து திடமான பொருளாக வெண்ணெய் எடுக்கப்பட்டது.

சற்று மூச்சு வாங்கிய வெண்ணெயை ஒரு சட்டியில் வைத்து கொதிக்க வைத்தார். வெண்ணெய் துடித்தது, துவண்டது. கொதித்த பின் ஏற்பட்ட திரவத்திற்கு நெய் என பெயரிட்டு ஒரு பாத்திரத்தில் ஊற்றி வைத்தார். அப்போது ஒரு வாடிக்கையாளர் அந்த பெண்ணிடம், ஒரு லிட்டர் பால் என்ன விலை என்றார். அந்த பெண் நாற்பது ரூபாய் என்றார். பின் அந்த நபர் ஒரு லிட்டர் நெய் என்ன விலை என்றார். அதன் விலை ஐநூறு ரூபாய் என அந்த பெண் கூறினார். அப்போது தான் நெய்க்கு புரிந்தது தான் இவ்வளவு கஷ்டப்பட்டதும், தன் மதிப்பை உயர்த்துவதற்காக தான் என்று. நம்மை நாம் மாற்றிக் கொண்டால், வாய்ப்புகள் நிறைந்த உலகம் மலரக் காணலாம்.

வள்ளுவரும், வினைப்பகை பின்சென்று அடும். தப்பிக்க முடியாது என்கிறார். (எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை வீயாது பின்சென்று அடும்). விவேகானந்தரோ, "பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்து விடும். உண்மைக்காக எதையும் துறக்கலாம். ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்காதே" என்கிறார்.

சங்கு சுட்டாலும் வெண்மை தரும். அதுபோல, நாம் எந்த சூழ்நிலையிலும் உயர்ந்த எண்ணங் களையே கொண்டிருக்க வேண்டும். இத்தகைய தன்மை மற்றவர்களுக்கு உதவுவதற்காக அல்ல. நமக்கு நாமே உதவிக் கொள்ளத்தான்.

அதற்காக பயம் கொள்ளலாமா?

அதுவும் கூடாது. அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்பது பாரதியின் வாக்கு.

வள்ளலார் வாக்கை பாருங்கள்:

குற்றம் செய்தல் எனக்கு இயல்பே
குணமாக் கொள்ளல் உனக்கு இயல்பே
சிற்றம்பலவா இனிச் சிறியேன் செப்பும் முகமன் யாதுளது?
தெற்றென் சிந்தை தெளிவித்து
அச்சம் துயர் தீர்த்து இற்றைப் பொழுதே
அருட்ஜோதி ஈக தருணம் இதுவாமே!"

குற்றத்தின் மூல வேர்களை ஆராய்ந்தால்... இவற்றில் ஒன்றோ பலவோ இருக்கும். காமம், கோபம், பேராசை.... இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

சுவாமி சிவானந்தர் சொல்கிறார்:

"ஒருவனை அழிக்கும் நரகத்தின் வாசல்கள் மூன்று: காமம், சினம், பேராசை. பேராசையும், காமமும் சிறிது மாறுபட்ட நிலையே. விவேகத்தால் சினத்தை வெற்றிகொள். அன்பாலும், மன்னிக்கும் குணத்தாலும் அது முடிவில் அழிக்கப்படுகின்றது."

தீயவை தீய பயத்தலால் தீயவை தீயை விட அதிகமாக அஞ்சப்பட வேண்டியது என்றாரல்லவா வள்ளுவர்.

இப்படித் தத்துவமாக சொல்லாமல், ஆய்வு முறையில் நன்மை தீமைகளை ஒருவர் சொன்னால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று யோசிக் கிறீர்களா? அப்படி மருத்துவமும் மனோதத்துவமும் இன்றைய கல்வி முறைப்படி பயின்று, 30 ஆண்டு ஆராய்ச்சிக்கு பின் முனைவர் பட்டமும் பெற்று, நமது ஞான ஆசிரியர்களின் கருத்துக்களை இன்றைய ஆய்வுக்குட்படுத்தி நவீன உலகம் ஏற்க தந்திருக்கும் முன்னிலை அமெரிக்க ஞானாசிரியர் ஒருவரின் கருத்துக்களை அடுத்த இதழில் பார்ப்போம்.

(தொடரும்)

# திருக்களர் ஆண்டவர் என்னும் ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள்



புதுவயல் செல்லப்பன்

கோவிலூர்த் திருமடம் தொடங்கிய காலத்திலிருந்தே, கர்நாடக மாநிலத்தில் உள்ள சிருங்கேரி மடத்தைக் குரு பீடமாகக் கருதி வருவது மரபு. எனவே, வீரசேகரர் நகரத்தார் பெருமக்களிடம் நன்கொடை பெற்றுச் சிருங்கேரி மடத்தில் ஸ்ரீ சாரதாம்பாள் திருக்கோயிலைக் கருங்கற் கோவிலாகக் கட்டச் செய்தார்.

சிருங்கேரி சங்கராச்சாரியார் கோவிலூர்த் திருமடம் வந்து தங்கியுள்ளார். அப்போது வீரசேகரரின் துணைக் கொண்டு சங்கர ஜெயந்தி விழாவையும் கொண்டாடியுள்ளார்.

இந்நிலையில், தஞ்சை மாவட்டத்தில் உள்ள புகழ் பெற்ற திருத்தலமாகிய சுவாமி மலையில் முருகப் பெருமான் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா நிகழ்ந்த போது, நகரத்தார் பெருமக்களின் வேண்டுகோளுக்கிணங்க வீரசேகரனாரும் சுவாமி மலைக்குச் சென்றார். முருகப் பெருமான் சிவனுக்கு உபதேசித்த திருத்தலம் சுவாமி மலை.

அங்கு சிவபெருமான் பேரில் மிகுந்த பக்தி கொண்ட இராசு முதலியார் என்பவர் வீரசேகரர் முன் விழுந்து வணங்கி ஒரு வேண்டுகோளும் விடுத்தார்.

தஞ்சை மாவட்டத்தில் திருஞானசம்பந்தரின் பாடல் பெற்ற திருத்தலமான திருக்களரில் சிவன் கோயில் சிதிலமடைந்து மனிதர்கள் உள்ளே சென்று வணங்கக் கூடிய வகையில் இல்லை என்றும், அதைச் செப்பனிட்டுத் திருக்குட நீராட்டுச் செய்ய வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டார்.

வீரசேகரர் “எமக்கும் தாம் மொழிந்தது போல எண்ணமுண்டு” என்று தெரிவித்து விட்டுக் கோவிலூர் சென்று விட்டார்.

சிறிது காலம் சென்று இராசு முதலியார் கோவிலூர் வந்து வீரசேகரரை வணங்கி, திருக்களர் திருக்கோயில் குறித்து மீண்டும் வேண்டிக் கொண்டார்.

கோவிலூர்த் திருமடத்தை ஏறக்குறைய 28 ஆண்டுகள் ஆட்சி செய்த வீரசேகரர், திருக்களர் பாரிஜாதவனேஸ்வரர், அமிர்தவல்லி அம்மன் ஆலயத்தைச் செப்பனிட்டு மேல் நடத்தும் பொருட்டு சோமசுந்தர ஸ்தபதியுடன் திருக்களர் வந்து தங்கித் திருப்பணி வேலைகளில் ஈடுபட்டார்.

மூன்றாண்டுகளுக்குள் செப்பனிட வேண்டிய அனைத்துப் பகுதிகளையும் செப்பனிடும்படி செய்தார். பெரிய ராஜகோபுரம், பெரிய மதில்கள், மற்றுமுள்ள பகுதிகள் அனைத்தும் கருங்கல் திருப்பணி செய்யப்பட்டன. சுவாமி, அம்மன் முதலிய எல்லா மூர்த்தங்களுக்கும் வெள்ளிக் கவசங்களும், பத்து நாள்கள் நடைபெறும் திருவிழாவில் வீதி வலம் வரும் பஞ்சமூர்த்திகளுக்கான வெவ்வேறு வாகனங்களும், தங்க, வைர அணிகலன்களும் செய்தளிக்கப் பெற்றன. பூசைகள் செய்வதற்கான அனைத்து உபகரணங்களும் அளிக்கப் பெற்றன. தேர்கள் செய்யப்பட்டு, தேர் முட்டிகள் அமைக்கப் பட்டன. தீர்த்தக் குளத்துக்குப் படித்துறைகள் கட்டப்பட்டன. வேதாந்த மடம், பசுமடம், வேத பாடசாலை, நந்தவனம், கோயிலில் பணியாற்றும் அர்ச்சகர் முதலியோர் வாழும் வீடுகள் அமைக்கப் பட்டன. தேரோடும் வீதிகள் புதிதாகப் போடப்பட்டன.



மேற்குறிப்பிட்ட யாவையும் வீரசேகரரின் அயராத உழைப்பாலும், அன்பர்களின் நன்கொடையாலும் உலகமே வியக்கும் வகையில் செய்து முடிக்கப்பட்டு, திருக்களர் ஆலயம் புதுப்பொலிவுடன் விளங்கியது.

புதுப்பித்த ஆலயத்தின் திருக்குட நீராட்டு விழா விரோதிகிருது ஆண்டு (கி.பி.1911) சித்திரை மாதம், 22–ஆம் நாள் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

பின்னர், வீரசேகரர் கோவிலூர் சென்று திருநெல்லையம்மன் ஆடிப்பூர உற்சவம் நிகழ்த்துவதற்கான முறைகளை ஏட்டில் எழுதி வைத்தார்.

மீண்டும் திருக்களர் வந்து கும்பாபிஷேகம் முடிந்த நாற்பத்தைந்தாவது நாளில் நடைபெற வேண்டிய மண்டலாபிஷேகத்தை 25ஆம் நாளிலேயே நடத்தி முடித்து, அடுத்த ஆண்டு நடத்த வேண்டிய

திருவிழாவையும் உடனடியாக நடத்திவிட வேண்டும் என்று ரிஷபக் கொடி ஏற்றி வைத்தார். மிகச் சிறப்பாக நடைபெற்ற திருவிழாவின் ஒன்பதாம் நாளில் தேர் வலம் வருவதற்காகத் தேர் வடம் தொட்டுக் கொடுத்தார்.

தேர் வீதிவலம் வரும் போது பாரிஜாதவ னேஸ்வரரின் தேர் பாதியில் கீழ்க்கோடியில் நின்று விட்டது. பக்தர்கள் எவ்வளவு முயன்றும் அசைந்து கொடுக்கவில்லை.

இந்நிகழ்வினால் வீரசேகரர் தாம் முக்தி அளிக்கப் பெறும் நாள் அடுத்த நாள் என்று உணர்ந்தார். அடியார்களுடன் மடத்துக்கு வந்தார்.

அன்றிரவு, தம் மாணாக்கர்களுக்கு, மறுநாள் நடக்க வேண்டியவற்றை எடுத்துரைத்தார். இராசு முதலியார் முதலிய அன்பர்களுக்கு, பின்னாளில் பாரிஜாதவனேஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற வேண்டிய காரியங்களைத் தொடர்ந்து நடத்தி வருமாறு அறிவுறுத்தினார். தம் மறைவிற்குப் பின், தம் திருமேனியைச் சமாதி வைக்க வேண்டிய இடத்தைத் தேர்ந்தெடுத்து, விலைக்கு வாங்கி, மடத்துக்கே சொந்தமாக்கினார்.

திருவிழாவின் நிறைவு நாளான பத்தாம் நாள் காலையில் இராசு முதலியார் முதலிய அன்பர்களை அழைத்து அன்றைய உச்சிப் பொழுதுக்குள் ஐந்து தேர்களையும் அவற்றுக்கான இடத்தில் கொண்டு வந்து சேர்த்து விடுவதற்கான முயற்சியில் ஈடுபடச் சொன்னார். தேரிழுக்க வந்த அன்பர்களுடன் அவரும் இணைந்து தேர் வடத்தைப் பிடித்தார்.

முதல் நாள் எவ்வளவு முயன்றும் சிறிதும் அசையாதிருந்த தேர் வீரசேகரர் வடத்தைத் தொட்டவுடன் வேகமாகக் கிளம்பி வலம் வரத் தொடங்கியது.

வீரசேகரர் பக்திப் பெருக்குடன் “ஹரஹர மஹாதேவா” என்று தேருடன் வலம் வந்து கொண்டிருந்தார். அந்நிலையிலேயே அவர் உயிர் பிரிந்து திருமேனி சாய்ந்தது. அருகில் வந்து கொண்டிருந்த அன்பர்கள் அவர் திருமேனி கீழே விழாமல் தாங்கிக் கொண்டனர்.

திருக்களர் ஆண்டவர் என்று மக்களால் அன்புடன் குறிப்பிடப் பெற்ற வீரசேகரர் கி.பி.1911 விரோதிகிருது வருஷம், வைகாசி மாதம், 27–ஆம் நாள் விசாக நட்சத்திரத்தில் ‘ஹர ஹர மகாதேவா’ என்று கோஷமிட்டவாறே சிவத்துடன் கலந்து விட்டார்.

கோவிலூர்த் திருமடம், கோவிலூர் திருநெல்லையம்மன் உடனாய கொற்றவாளீசர் திருக்கோயில், திருக்களர் அமிர்தவல்லியம்மன் உடனாய பாரிஜாதவனேஸ்வரர் திருக்கோயில் ஆகியவை சிறப்புறுமாறு அருந்தொண்டாற்றித் தமிழ் வேதாந்தக் கல்வியையும் வளர்த்த, திருக்களர் ஆண்டவரான வீரசேகரரின் புகழ் என்றும் நிலைத்திருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ■



# உங்கள் மூடு எப்படி?

வேண்டியவர் வீட்டு திருமண வரவேற்புக்குப் போகிறோம். அதுவும் பெரிய ஹோட்டலில். எப்படிப் போவோம்? குளித்து, சுத்தமாக, நன்கு உடுத்திக்கொண்டு தானே!

சிலர் இருக்கிறார்கள். திருமணம், வேறு ஒருவருக்குத்தான். ஆனால், அதற்காக இவர்கள் அழகு நிலையம் போவார்கள்! முகத்துக்கு பிளீச்சிங், புருவத்துக்கு திரெட்டிங், கூந்தல் திருத்தம். இப்படி சிலவற்றைச் செய்து கொள்வார்கள். இதற்காக புதுத்துணி எடுப்பவர்களும் உண்டு!!

விருந்தாளியாகப் போவதற்கே இப்படி! இவர்களைப் பார்ப்பவர்கள் அசந்து போக வேண்டுமாம். அப்படி அலங்கரித்துக் கொண்டு போவார்கள்.

அதே நபர் அவரது வீட்டில் அதற்கு ஒரு வாரம் முன்பு, ஒரு பகல் நேரம் எப்படி இருந்திருக்கலாம்? இருந்தார்கள் அல்ல. இருந்திருக்கலாம். தான்.

சாதாரண நைட்டி, கலைந்த தலை, அலம்பாத முகம், தவிர வியர்வையுடன் கூரியர் கொடுக்கப் போனவருக்கு, இவர்தானா என்று அடையாளம் தெரியாத அளவுக்கு இருந்திருக்கலாம். இப்படி இருப்பவர்களும் உண்டுதானே.

ஒரே நபர். ஆனால் முற்றிலும் வேறுபட்ட இரண்டு தோற்றங்கள். கோயில்களில் அபிஷேகத்தின் போதும் அலங்காரத்திற்குப் பின்பும் இருக்கும் அம்மனைப் போல. இது புறத்தோற்றம் பற்றியது. மற்றொரு வேறுபாடும் உண்டு. அது மனோபாவம் சார்ந்தது.

இரண்டு, இரண்டரை வயதிற்கு குறைவான பிள்ளைகளே ஒருவகை அழகு இல்லையா. தூக்கி வைத்துக்கொள்ள பலருக்கும் ஆசை வரும் தானே? வெது வெதுப்பான வெண்ணீரில் குளிப்பாட்டப் பட்டு, மெல்லிய துண்டால் தலை துவட்டப் பட்டு, சாம்பிராணி புகை போடப்பட்டு, உடம்பு முழுக்க பேபி பவுடர் கொட்டப் பட்டு, மணக்கும் துணி உடுத்தி, தலைவாரி, நெற்றியிலும் கன்னத்திலும் கருப்பு நிறத்தில் விரலால் பெரிதாய் வைத்த பொட்டுடன்.. முகத்தில் தூங்கி எழுந்திருந்த மதமதப்புடன், அதன் குட்டி வயிறு நிறைய பாலோ வேறு எதுவோ சாப்பிட்டு விட்டு இருக்கும் குழந்தை எப்படி இருக்கும்? என்ன மனநிலையில், எப்படிப்பட்ட மூடில் Mood ல் இருக்கும்?

குழந்தை மட்டுமல்ல. அதை வைத்திருப்பவரும் நிம்மதியாக எதையும் புன்னகையுடன் எதிர்கொள்ளும் மனநிலையில் இருப்பார்கள். உடன் இருப்பவர்கள்,





டாக்டர்
சோம வள்ளியப்பன்

குழந்தையை அழைப்பவர்கள், அதனுடன் உரையாடுபவர்கள் அனைவருமே சந்தோஷமான மூடில் இருப்பார்கள்.

அதே குழந்தை வயிறு வலியால் இரவெல்லாம் தூங்கியிருக்கவில்லை என்று வைத்துக் கொள்வோம். தவிர, அதன் உடல் லேசாக சுடுவதால் குளியலும் இல்லை. மருத்துவர் கொடுத்த மருந்து சாப்பிட்டு சாப்பிட்டு நாக்கு கசந்து, எந்த உணவையும் சாப்பிட மாட்டேன் என்கிறது. சதா அழுது கொண்டிருக் கிறது. அம்மா இடுப்பை விட்டு இறங்கமாட்டேன் என்று அடம் பிடிக்கிறது. எந்த விளையாட்டுப் பொருளைக் காட்டினாலும், வேண்டாம் போ என்று தள்ளுகிறது. அழுதழுது முகம் வீங்கி, மூக்கு சிவந்து, குளிக்க வைக்காமலும் துணி மாற்றாமலும், அதன் சின்ன கேவல் தொடர்கிறது. அதன் மூடு எப்படி இருக்கும்?

முன்பு பார்த்த அதே குழந்தை தான். ஆனால், இப்போது நேர்மாறான தோற்றத்துடனும், மனோ நிலையுடனும்

இருக்கும். எதுவும் பிடிக்காமல் எதையும் ரசிக்காமல், எல்லாவற்றுக்கும் சிணுங்கிக் கொண்டு, மொத்தத்தில் ஒரு மோசமான மூடில் – in bad mood. குழந்தைகளை மட்டுமல்ல, இந்த 'நல்ல மூடு', 'கெட்ட மூடு' களை பல பெரியவர்களிடமும் பார்த்திருப்பீர்கள், அனுபவித்துமிருப்பீர்கள்.

"பாஸ் இன்று நல்ல மூடில் இருக்கிறார். கையெழுத்து வாங்க வேண்டிய பேப்பர்களை எல்லாம் கொண்டு போங்கப்பா."

"அவ இன்றைக்கு ரொம்ப ஜாலி மூடில் இருந்தாள். என்ன கேலி செய்தாலும் லைட்டா எடுத்துக் கொண்டாள்".

"அவர் இன்றைக்கு 'மூடுஅவுட்' மாதிரித் தெரியுறார். போய் மாட்டிறாத" இப்படி நல்ல மூடுக்கும் கெட்ட மூடுக்கும் மாறிமாறிப் பயணிப் பவர்கள் உண்டு. மூடு-mood-என்பது ஆங்கில வார்த்தை. இதை தமிழில் மனநிலை என்றுதான் சொல்ல முடியும். ஆனால், அது அதைவிடவும் நுட்பமானது.

இன்றைக்கு படம் பார்க்கும் மூடு இல்லை என்பார்கள். அவன் என் மூடைக் கெடுத்து விட்டான் என்பார்கள். 'ஹீ இஸ் எ மூடு ஸ்பாயிலிங் பெலோ' என்று திட்டுவார்கள். மொத்தத்தில் ஒருவர் ஆர்வத் துடனும் கலகலப்பாக இருப்பதும், ஆர்வமின்றி சோர்வாக இருப்பதும் அவர் மூடு சார்ந்தது.

மறைந்த கவிஞர் வாலியைத் தெரியாமல் இருக்க முடியாது. குறைந்த பட்சம் போட்டோக் களிலாவது பார்த்திருப்பீர்கள். மனிதர் எப்படித் தோற்றமளிப்பார்? எப்போதும் கல்யாணக் கோலம் தான். குளித்து சுத்தமாக உடுத்தி, வாயில் தாம்பூலத்துடன் அதையெல்லாம் விட முக்கியமாக முகம் நிறைய சிரிப்பும், வாய் முழுக்க கேலிப் பேச்சுமாய் கலகலவென்று இருப்பார். அவரை நினைத்தாலே இவ்வளவும் நினைவுக்கு வரும். பார்த்தால் அருகில் போய் பேச ஆசையும் தைரியமும் வரும். வேறு சிலர் இருக்கிறார்கள். அவர்கள் முகம் ஜீரோவாட் பல்பு போல எப்போதும் வாட்டமாக இருக்கும். சிரிப்பது அரை சென்டிமீட்டருக்கு மேல் இருக்காது. ஆர்வம் இல்லாமல் சோர்வாய் ஏனோதானோ என்று இருப்பார்கள். என்ன கேட்டாலும் உம், ஆம், இல்லை என்பது போல சில வார்த்தைகள் தான் சொல்வார்கள். கலகலப்புக்கும் அவர்களுக்கும் வெகுதொலைவு. கிட்டே போகவோ பேசவோ யோசிக்க வைப்பார்கள்.

இதெல்லாம் மூடு சார்ந்தது மட்டும் இல்லை. எப்போதும் இப்படிப்பட்ட டல் மூடிலேயே இருப்பதால், அதுவே அவர்கள் குணாதிசயம் பர்சனாலிட்டியாக மாறிவிட்டிருக்கும்.

நல்ல மூடில் இருந்தால் வெற்றி நமது. நம்மை அறியாமல் நம் மூடு மாறி, நாம் உரிய விதம் நடந்து கொள்ள முடியாமல் போய் விட்டால், வெற்றி குட் பை சொல்லி அல்ல, சொல்லாமலே கூட கிளம்பி விடும்.

மூடு சரியாக இல்லாவிட்டால் கோபம், வெறுப்பு, எரிச்சல், சங்கடம், சோர்வு, சோகம் போன்றவை வரும். பொறுமை இருக்காது. எரிச்சல் வரும். அது நம் பேச்சில் தெரியும். மற்றவர் தவறுகளைப் பெரிதுபடுத்துவோம். குற்றம் காண்போம். நியாய மான அளவு சகித்துக் கொள்ள மாட்டோம். மறுப்போம். பின்னால் வருத்தப்படுவோம்.

மூடு சரியாக இருந்தால் ஆர்வம், வேகம், விருப்பம், தயாளம் எல்லாம் வரும். வாய்ப்புகளைப் பார்க்க முடியும். மற்றவர்க்கு வாய்ப்புக் கொடுக்க முடியும். சிறு விஷயங்களையும் பாராட்டுவோம். பொறுமை காப்போம். பொறுத்துப் போவோம். விட்டுக் கொடுப்போம். தொடர்ந்து முயற்சிப்போம். பிறரை சிறப்பு செய்வோம். நன்றி சொல்வோம். எடுத்துப் போட்டு வேலைகள் செய்வோம்.

குழந்தைகள் எல்லா நேரமும் நல்ல மூடில் இருப்பதில்லை. ஆனால், பெரியவர்கள் அப்படி விட்டுவிடலாமா? விட்டுவிட்டால் அது அவர்களுக்கு லாபம் தருமா?

வெற்றியாளர்கள் முயன்று தங்களை நல்ல மூடில் வைத்துக் கொள்கிறார்கள். ஆமாம், மூடுக்கு ஏற்றபடி நடந்து கொள்வது வேறு, சூழ்நிலைக்கு ஏற்ப மூடை வலிந்து மாற்றிக் கொள்வது வேறு.

தன் மூடு என்ன என்பதை உணர முடிய வேண்டும். சரியாக இல்லாவிட்டால், இறங்குகின்றது என்று உணர்ந்தால், அதை வலிய முயன்று நல்ல 'பிரேம்' க்கு மாற்ற வேண்டும்.

காரணம், வேறு எதாகிலும் என்றால், 'நான் என்ன செய்ய முடியும்?' என்று கேட்கலாம். ஆனால், பிரச்னை நம் மூடுதான் என்றால்! ஆம், நம் மூடே நமக்கு எதிரியாகி விடக் கூடாது. ■

**சுவீகாரத்திற்கு ஆண் /பெண் குழந்தை தேவை**

இளையாற்றங்குடி பட்டினசாமி பிரிவைச் சேர்ந்த குடும்பத்திற்கு 1 முதல் 10 வயதிற்கு உட்பட்ட ஆண்/பெண் குழந்தை சுவீகாரத்திற்கு தேவை. எந்தக் கோவில் எந்தப் பிரிவும் சம்மதம்.

தொடர்புக்கு : 84899 36944

ADVT.

# நேரத்தைப் பற்றிப் பேசும் திருக்குறள்


லேனா தமிழ்வாணன்



இலக்கிய உலகில் தமிழர்கள் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் ஏராளமாக இருக்கின்றன. நான் ஒரு தமிழ் மாணவன் என்ற வகையில் 'இலக்கியத்தில் நாம் பெற்றிருக்கிற செல்வம், உலகிலே எந்த மொழியில் இருக்கிறது?' என்று என்னால் கேள்வி கேட்க முடியும்.

நம் தமிழை விட மூத்த மொழிகள் இருக்கலாம். ஆனால், இலக்கிய வளம் எங்கே இருக்கிறது என்று கேட்டால், அந்தக் கேள்விக்கு பெரும்பாலும் மற்ற மொழிக்காரர்கள் தரக்கூடிய பதில் ஏமாற்றம் தருவனவாகவே இருக்கின்றன.

நம்முடைய இலக்கிய வளத்தை எண்ணுகிற பொழுது, உலகில் திருக்குறளுக்கு இணையாக ஓர் இலக்கியம் இருக்கிறதா? 2000 ஆண்டுகளுக்கு முன்பாக மனிதர்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த காலத்திலேயே, பண்பாடுகளை, நாகரிகத்தை, மருத்துவத்தை இன்னும் சொல்லப்போனால் நிர்வாகத்தைப் பற்றியெல்லாம் வள்ளுவர் பேசியிருக்கிறார். வியப்பாக இருக்கிறது!



ஒருவர் 'திருக்குறளும் மேலாண்மையும்' என்பதை பிஎச்.டி. பட்டத்திற்கான ஆய்வுக் களத்திற்கு எடுத்துக் கொண்டு மிகச் சிறப்பாக செய்து முடித்தார் என்று சொன்னால், 'அதிலே இல்லாதது என்ன?' என்றுதான் நமக்கு கேட்கத் தோன்றுகிறது. வாழ்வின் எல்லாக் கூறுபாடுகளையும் பேசுகிற ஓர் அருமையான வாழ்வியல் இலக்கியம் நம் திருக்குறள்.

திருக்குறளிலே உடற்கூறு இருக்கிறது. உளவியல் இருக்கிறது. ஒரு சில இடங்களிலே திருவள்ளுவரை ஓர் உலக நீதியரசரைப் போல நாம் பார்க்க நேரிடுகிறது. ஒரு நீதியரசருடைய தீர்ப்பு எந்த அளவிற்குச் சிறப்பாக இருக்குமோ, அந்த அளவிற்குச் சிறப்பாக வள்ளுவருடைய கூற்றுகள் இருக்கின்றன.

தமிழர்களை உயர்த்திப் பிடிக்கிற ஓர் நூல் என்று சொன்னால், நமக்குக் கிடைத்திருக்கிற அரிய பொக்கிஷமாக நாம் பெற்றிருக்கிற திருக்குறளைத் தான் குறிப்பிட வேண்டும். "உயர்ந்த நாகரிகமாக நம் தமிழ் நாகரிகம் திகழ்ந்தது என்பதற்கு ஒரு சான்று சொல்லுங்கள்?" என்று யாரேனும் கேட்டால், திருக்குறளைத் தூக்கி மேசை மீது வைத்து, 'இதற்கு சமமாக வேறு இலக்கியம் ஒன்றை தராசுத் தட்டிலே வையுங்கள் பார்ப்போம்' என்று கேட்க முடியும்.

இப்படிப்பட்ட திருக்குறள், நேரத்தைப் பற்றி பேசுகிறது என்பது எனக்கு பெருமிதமாக இருக்கிறது. நேரத்தைப் பற்றித் திருவள்ளுவர் 'காலம் அறிதல்' என்கிற தலைப்பில் 10 குறள்களில் சொல்கிறார். அவர் 'நேரத்தைப் பற்றி பேசுகிறார்' என்று சொன்னால், அது ஏதோ கடிகாரம், காலண்டர் பற்றியெல்லாம் அல்ல.

அவர், 'காலம்' என்று சொல்வதை நாம் எப்படி எடுத்துக் கொள்ள வேண்டி இருக்கிறது தெரியுமா? காலண்டரின் அடிப்படையில் அல்ல. அவர் காலம் என்றாலே தருணம், சரியான சந்தர்ப்பம், 'மொமெண்ட்' என்பதைத் தான் சொல்கிறார்.

உதாரணத்திற்கு,

**'ஞாலம் கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தாற் செயின்'**

என்கிற குறளைப் பார்க்கிற பொழுது, இந்த உலகத்தையே நாம் அடைய நினைத்தாலும், அது சாத்தியமே. ஆனால், சரியான நேரத்தில் அதற்கான முயற்சியை செய்ய வேண்டும். அதற்கான களங்களை விரிவாக்க வேண்டும் என்று எவ்வளவு அருமையாகச் சொல்கிறார்! ஞாலம் கருதினும் கைகூடுமாம். இந்த உலகத்தையே அடைய நினைத்தாலும் சரி, அல்லது இந்த உலகத்தில் நீ என்ன அடைய வேண்டும் என்று நினைத்தாலும் சரி, அதை சரியான காலகட்டத்தில் அணுக வேண்டும் என்கிறார்.

இன்னோர் இடத்தில் சொல்கிற போது, 'கொக்கு போல' என்று சொல்கிறார். கொக்கு இருக்கிறதே, அது தண்ணீரில் காலை வைத்துக் கொண்டு சிலை போல அசையாமல் நிற்கும். 'ஓடுமீன் ஓட, உறுமீன் வருமளவும் காத்திருக்குமாம் கொக்கு' என்று சொல்வார்களே அப்படி, தனக்கான மீன் வருகிற நேரம் பார்த்து, ஒரு கொத்துக் கொத்தியது என்றால் மிகச் சரியாக அந்த மீனைப் பிடிக்கும்.

அப்படி ஒரு கொக்கிற்கு, ஒரு மீன் சிக்கிக் கொள்வதைப் போல.... சந்தர்ப்பங்கள் வருகிற பொழுது, தவறவிடாமல் சரியான நேரத்தில் அதை அடைய வேண்டும் என்ற சொல்லி, மிக அழகாகத் திருவள்ளுவர் விவரிக்கிறார். எனவே, இதுவும் தருணம் என்கிற ஒரு கோணத்திலேதான் சொல்லப் படுகிறது.

அதே போல, இதே 'காலம் அறிதல்' என்ற தலைப்பில் இன்னொரு குறளில்,

**'அருவினை என்ப உளவோ, கருவியான்
காலம் அறிந்து செயின்'**

என்கிறார். 'இந்த உலகத்திலே செய்ய முடியாத செயல் என்று ஏதாவது ஒன்று இருக்கிறதா என்ன?' என்கிற கேள்வியை திருவள்ளுவர் முன்வைக்கிறார். அவர், 'நீ எதையும் முடியாதது என நினைக்காதே. இந்த உலகத்தில் சாத்திய மில்லாதது எதுவுமே இல்லை. காலமறிந்து செய்யின்... சரியான தருணத்திலே செய்தால் எல்லாம் சாத்தியமே' என்கிறார். இங்கேயும் அவர் தருணத்தைத்தான் சொல்கிறார்.

இன்னொரு குறளில் என்ன சொல்கிறார் என்றால், இந்த யானை இருக்கிறதே... அது தரையிலே ஒரு வலிமையான மிருகம். முதலை இருக்கிறதே, அது தண்ணீரிலே வலிமையான மிருகம். ஆக, எது எந்த இடத்தில் என்பது – அதாவது களம் என்பது – ரொம்ப முக்கியம் என்கிறார். யானை தண்ணீரில் மாட்டிக் கொண்டால், முதலைக்கு இரையாகி விடும் அல்லது முதலையால் கடிபட்டு விடும். அதே நேரத்தில் முதலை தரைக்கு வந்தால், யானைக்கு இரையாகி விடும் அல்லது மிதிபட்டு இறந்து விடும்.

எனவே எது, எதை வெல்லும் என்பது களம், காலம் போன்ற சூழல்களைப் பொறுத்தது என்பதையும் அவர் சொல்கிறார்.

இன்னோர் உதாரணமும் உண்டு. அந்தக் காலத்தில் கூகை என்று ஒரு பறவை இருந்திருக்கிறது. அந்தப் பறவை எது என்பதை மிருகவியல் வல்லுநர் களிடம் தான் கேட்க வேண்டும். கூகை என்பதை கிட்டத்தட்ட கோட்டான் என எடுத்துக் கொள்ளலாம்.

இந்தக் கோட்டானுக்கும் காக்கைக்கும் சண்டை வந்தால், எது ஜெயிக்கும் என்பதைப் பற்றி அவர் சொல்லும் போது, 'பகல் வெல்லும் கூகையைக் காக்கை'. அதாவது பகலிலே கோட்டானைக் காக்கை வென்றிடுமாம். அதே நேரத்தில் இரவானால், கூகையானது ஒரு வலுவான பறவையாக மாறி, காக்கையைக் கொன்று விடுமாம்.

எனவே எதை, எது வெல்கிறது என்பதற்கு யானை முதலைபோல, கூகை காக்கையைப்போல, நாம் எப்போது ஜெயிக்கிறோம் என்று சொன்னால், களம் பார்த்து, தருணம் பார்த்து அணுகுவதில் தான் நம்முடைய வெற்றி இருக்கிறது என்று திருவள்ளுவர் நமக்கு அடையாளம் காட்டுகிறார்.

"அவர் சொல்வதெல்லாம், உரிய காலத்தில் உரிய காரியத்தைச் செய்யுங்கள். இதற்குத் தருணம் பார்த்துக் காத்திருங்கள்" என்கிறார்.

அந்தத் தருணத்தைத் தேர்ந்தெடுத்து, கொக்கு கொத்துவதைப் போல, கூகையை காக்கை வெல்வதைப் போல சரியான தருணம் பார்த்து அணுகுங்கள் என்று திருவள்ளுவர் சொல்லிக் கொடுக்கும் உண்மை இருக்கிறதே அருமை! எவ்வளவு காலத்திற்கு முன்பாக நிறுவப்பட்ட இந்தத் திருக்குறள், எவ்வளவு காலமானாலும் 2000 ஆண்டுக் காலம் கடந்த பின்பும் மாற்ற முடியாததாக இருக்கிறது.

இன்றைய நவீன சிந்தனைகளுக்கும் பொருந்து பவையாக இருக்கின்றன. நவீன உத்திகளுக்கும், டைம் மேனேஜ்மெண்டில் இன்றைக்குப் பேசப்படுகிற எவ்வளவோ விஷயங்களாக இருந்தாலும் அவை இதற்குள் அடங்கியாக வேண்டும் என்கிற கருத்தை நிறுவியிருக்கும் திருக்குறளை எண்ணும்போது, உண்மையில் தமிழர்களெல்லாம் பெருமைப்பட வேண்டும். சரியான தருணங்கள் தாம் வெற்றியின் விதைகள். இதை உணர்ந்தால், நம்முடைய வாழ்க்கையில் என்றும் வெற்றிதான். (தொடரும்)

## வாழ்த்துக்கள்



தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர் சங்க தலைவர் தேர்தலில் பிரபல திரைப்பட இயக்குனரும் தயாரிப்பாளருமான மறைந்த இராம.நாராயணன் அவர்களின் புதல்வரும் தேனாண்டாள் பிலிம்ஸ் அதிபருமான முரளி வெற்றி பெற்றுள்ளார். அவரது பணிகள் சிறக்க நமது செட்டிநாடு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

# 2020 நவம்பர் மாத சந்தாதாரர்கள்

R. கணேசன், குடகு
MC. சோமசுந்தரம், சேலம் - 16
C. அமர்ஜோதி, சென்னை - 17
S. முத்துக்குமார், சென்னை - 117
RM.L.சுப்பிரமணியன், புதுக்கோட்டை
K. லெட்சுமணன், பெங்களூரு - 38
PRS. சொக்கலிங்கம், சென்னை - 26
Dr. ராம் சிதம்பரம், சென்னை - 18
M. அடைக்கப்பன், காரைக்குடி - 3
ராம்குமார் சிங்காரம், சென்னை - 32
NV. மணிகண்டன், நாமக்கல்
L. பழனியப்பன், சென்னை - 28
L.RM. தேனப்பன், கோட்டையூர்
OL.SP. உலகப்பச் செட்டியார், மதுரை
N. காசி விஸ்வநாதன், அறந்தாங்கி
Dr. ராய சிதம்பரம், காரைக்குடி - 3
M. பாரி, திருச்சி - 17
V. அண்ணாமலை, சென்னை - 116
A. வள்ளியப்பன், சென்னை - 17
PR. அருணாசலம், வலங்கைமான்
M/s. பெப்பர்ஸ் டிவி, சென்னை - 35
M. சுப்பிரமணியன், மன்னார்குடி
AV. ஆண்டப்பன், சிவகாசி
திருநாவுக்கரசு அண்ணாமலை, காரைக்குடி
T. அண்ணாமலை, சென்னை - 87
SP. நாச்சியப்பன், சென்னை - 17
M. அருண், சென்னை - 28
திருமதி M. வள்ளியம்மை, கோவை
திருமதி மீனாட்சி, மிதிலைப்பட்டி
திருமதி R. சீதாலெட்சுமி, திருச்சி
திருமதி S. வள்ளியம்மை, காரைக்குடி

திருமதி M. விசாலாட்சி, புதுவயல்
AN. சேகர், கோயம்புத்தூர் - 5
A. சுப்பிரமணியன், சென்னை - 61
M. நாகப்பன், கோனாபட்டு
VE. நாராயணன், தஞ்சாவூர் - 7
M. முத்துராமன், காரைக்குடி
SV. சிவநடராஜன், புதுக்கோட்டை
AR.KR. அருணாசலம், சென்னை - 33
A. சிங்காரம், மதுரை - 20
L.RM. வயிரவன், காரைக்குடி
AL. வெங்கடாசலம், கள்ளக்குறிச்சி
RM.நடராஜன் செட்டியார், சென்னை- 53
RM. பசுபதி, நாட்டரசன்கோட்டை
L. முத்து நாச்சியப்பன், சென்னை - 53
P. நாச்சியப்பன், சென்னை - 125
AR. கதிரேசன், சூரமங்கலம் - 5
V.ஆவிச்சி, கோயம்புத்தூர் - 16
N.பழனியப்ப செட்டியார், திருச்சி - 19
M. சோமசுந்தரம், மதுரை - 14
G. காந்திநாதன், தேவகோட்டை
S. லெட்சுமணன், காரைக்குடி - 1
S. சுப்புசுந்தரம், சென்னை - 3
RM. பழனியப்பன், சென்னை - 4
SP. முத்தையா, கேரளா
RM. கணேசன், மானாமதுரை
CT. தியாகராஜன், சேலம் - 7
MP. சுப்பிரமணியன், காரைக்குடி - 1
M.KP.V. சேதுச் செட்டியார், கோவை
RM. மணிகண்டன், திருச்சி - 712
M. முத்தையா, சென்னை - 40
AR. ராமனாதன், சென்னை - 4

V. ராமசாமி, சென்னை - 83
RM. சுப்பிரமணியன், திருச்சி - 12
AR. சாத்தப்பன், கோயம்புத்தூர் - 41
S. சோமசுந்தரம், திருச்சி - 3
V. சேதுராமன், சென்னை - 100
L. ராதா, திருச்சி
SM.கணேசன் செட்டியார், சென்னை - 83
KM. நாகப்பன், கோயம்புத்தூர் - 43
SP. தியாகராஜன், சென்னை - 26
VR. ராமசாமி, மதுரை - 20
SP. செல்வகேசரி, மதுரை - 20
L. ராமநாதன், பெங்களூரு - 8
PR. அழகப்பன், சென்னை - 24
N. திருஞானம், சிங்காநல்லூர்
N. சுந்தரமூர்த்தி, சென்னை - 93
N.S.S. சிவசுப்பிரமணியம், ஈரோடு - 3
Prof. S. சின்னத்தம்பி, திருச்சி
PL. காடப்பன், சென்னை - 81
RM. மெய்யப்பன், காரைக்குடி - 2
N. அழகப்பன், காரைக்குடி - 1
AN. வயிரவன், திருச்சி - 10
RM. நெல்லியான், சென்னை - 5
Y. கிருஷ்ணன், சென்னை - 53
M.RM.ஆண்டான் செட்டி, காரைக்குடி- 2
திருமதி M. மீனாட்சி ஆச்சி, வேகுப்பட்டி
" சித்ரா சுப்பிரமணியன், ஈரோடு
" மீனாட்சி முத்தையா, மதுரை - 14
" M. நாச்சாள், சென்னை - 37
" R. மீனாட்சி, திருச்சி - 17
" N.N.S. நாகம்மை ஆச்சி, காரைக்குடி -2
" SP. அழகம்மை, சென்னை - 80

**சந்தா செலுத்தியும் தங்கள் பெயர் இடம்பெறவில்லையெனில் தொடர்புக் கொள்ள: 044 4671 7755**



காளையார்மங்கலத்தில் 110 ஆண்டுகள் பழமையான கோவிலில் உள்ள அரசமரம் அதனுள் இணைந்து வளர்ந்துள்ள வேப்ப மரத்திற்கும் புனர்பூசம் நட்சத்திரத்தில் உலக நலம் வேண்டி திருக்கல்யாண நிகழ்ச்சி ஜோதிட ரத்னா எஸ்பி.கண்ணப்ப செட்டியார் அவர்களால் நடத்தி வைக்கப்பட்டது.



ஆர்.கே.நகர் அரிமா சங்கம் சார்பாக ஜானகிராமன் என்பவருக்கு ரூ.47,500 மதிப்புள்ள சலவை (இஸ்திரி) தள்ளு வண்டி வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஆர்.கே.நகர் அரிமா சங்க சர்வதேச சேவைக்குழுவின் மாவட்ட தலைவர் தேவகோட்டை அ.லெட்சுமணன் உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அறிவியல் அற்புதங்கள் 7

சிறுகூடல்பட்டி முத்துக்கருப்பன்



# விஞ்ஞானத்தின் பிதாமகன்

## (தாமஸ் ஆல்வா எடிசன்)

### எடிசனின் இயங்கும் படம் (Motion Picture):

கண்ணாடித் தகட்டில் ஒட்டிய சித்திரங்கள் வழியே ஒளியைப் பாய்ச்சி, அதன் பிம்பங்களைத் திரையில் ஓடவிட்டும் ஆடவிட்டும் பொழுதுபோக்கு காட்டுவது 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கிவிட்டது. 1879–ல் எட்வர்ட் முய்பிரிட்ஜ் என்ற புகைப்படக்காரர், ஒன்றுக்கு மேற்பட்ட கேமராக்களை ஒரே நேரத்தில் இயக்கி, கண்காணும் காட்சிகளின் அடுத்தடுத்த அசைவுகளைப் படம் பிடித்து, அவற்றின் பிம்பங்களை ஜுப்ராக்சிஸ்கோப் என்ற புரொஜெக்டர் மூலம் திரையில் ஓடவிட்டு, தான் எடுத்த காட்சிகளைத் திரையில் பிரதிபலிக்கச் செய்தார்.



ஓடும் குதிரை ஒன்றின் கால்களை இம்மாதிரி, படம் பிடித்து, அது தாவும்போது அதன் நான்கு குளம்புகளும், ஒன்றுகூடத் தரையில் பாடாமல் தரைக்குமேலே தெரிகின்றன என்பதை திரையில் காட்டி ரசிகர்களை வியப்படையச் செய்தார். அந்தப் பெருமிதத்துடன் முய்பிரிட்ஜ், எடிசனைச் சந்தித்து தன் ஜுப்ராக்சிஸ்கோப்புடன் எடிசனின் ஃபோனோகிராஃபை இணைத்துப் பேசும் படம் தயாரிக்கலாம் என்று அழைத்தார்.

ஆனால் அதே சமயத்தில் எடிசனின் கூர்மையான சிந்தனையும், கற்பனைத் திறனும் வேறு திசையில் பயணித்துக் கொண்டிருந்தன. பல கேமராக்களைக் கொண்டு படம் பிடிப்பது பணத்தையும் உழைப்பையும் வீணடிக்கும் என்று எடிசன் எண்ணினார். ஆகவே முய்பிரிட்ஜ்ஜுடன் கூட்டு சேரும் திட்டத்தைத் தவிர்த்தார். பேசும்படக் கருவி ஒன்றைத் தானே புதிய முறையில் வடிவமைப்பது என்று முடிவு செய்தார்.

அதன் தொடர்ச்சியாக, தன் முயற்சியில் யாரும் குறுக்கிடக் கூடாது என்பதற்காக பேசும்படக் கருவி தயாரிப்பதில் தான் உறுதியொடு இருப்பதைக் காப்புரிமை அலுவலகத்தில் எச்சரிக்கையாகப் (Caveat) பதிவு செய்தார். “என் ஃபோனோகிராஃப் செவிகளுக்கு என்ன செய்கிறதோ அதைக் கண்களுக்குச் செய்யும் கருவி ஒன்றைக் கண்டு பிடிப்பதில் நான் முனைந்திருக்கிறேன்.” என்பது அந்தப் பதிவு.

அவர் கற்பனையில் உதித்த வடிவத்தைக் கண்ணெதிரே காட்டும் பொறுப்பை சிறந்த புகைப்படக் கலைஞரான உதவியாளர் டிக்சனிடம் ஒப்படைத்தார். எடிசனின் தொடர் கண்காணிப்பின் கீழ் டிக்சன் எண்ணற்ற சோதனைகள் செய்து பார்த்து, கினெடோகிராஃப் (Kinetograph) என்ற சாதனம் இணைந்த கினெடோஸ்கோப் (Kinetoscope) என்ற இயங்கும் படக் கருவியை உருவாக்கினார்.

கினெடோகிராஃப் என்பது, ஒரே கேமராவைத் தொடர்ந்து கிளிக் செய்து, கண்ணில் தெரியும் காட்சிகளின் அசைவை, நகர்வை, ஓட்டத்தை செல்லுலாயிட் ஃபிலிம் சுருளில் படுக்கை வசத்தில் தொடர்ந்து பதிவு செய்து, காட்சிகளுக்கான ஒலிகளையும் ஃபோனோகிராஃப் மூலம் கலவை செய்யும் கருவி.

கினெடோஸ்கோப் என்பது காட்சிகளும், ஒலியும் பதிவு செய்யப்பட்ட 18 மி.மீ. ஃபிலிம் சுருளை வேகமாகச் சுழலச் செய்து அதன் வழியே ஒளியைப் பாய்ச்சி, ஒரு விழித்துவாரம் (Peep-hole viewer) வழியே ஒருவர் மட்டும் வெண்திரையில் பேசும்படத்தைக் காணவைப்பது. ஆகஸ்ட் 1891–ல் இதற்குக் காப்புரிமை பெறப்பட்டது.

சில ஆண்டுகளில் விழித் துவாரம் வழியே ஒவ்வொருவராகப் பார்ப்பதற்குப் பதிலாக, புரொஜெக்டர்கள் மூலமாக ஒளியைப் பாய்ச்சி, பலர் அமர்ந்து ஒரு படத்தைப் பார்க்கும் அமைப்புக்கு மேம்பாடு செய்து கொண்டார்.

1896-ல் எடிசன் தொழிலகத்தில் தயாரான விடாஸ்கோப் (Vitascope) என்ற ப்ரொஜெக்டர் மூலம் திரைப்படங்கள் நியூயார்க்கில் பொது அரங்கங்களில் திரையிடப்பட்டன. அணிவகுப்புகள், ரயில் கொள்ளை, குத்துச்சண்டை, யானை விளையாட்டு என பலதரப்பட்ட பொருளடக்கங்களில் கிட்டத்தட்ட 1200 குறும்படங்களை எடிசன் திரையிட்டார். திரைப்படங்களைத் தயாரிக்க பிளாக் மரியா (Black Mariya) என்ற பெயரில் ஒரு ஸ்டூடியோவை எடிசன் நிறுவினார். திரைப்படம் தயாரிப்பதற்கென்று உலகிலேயே முதன்முதலாகக் கட்டப்பட்ட ஸ்டூடியோ பிளாக் மரியா.

இதில் கவனிக்கத்தக்க செய்திகள் இரண்டு:

மற்ற கம்பெனிகள் எடிசனின் படங்களைக் காப்பியடிக்க முயன்றன. அதைத்தடுக்க, தன்னுடைய படங்களைப் புகைப்படத்தாளில் அச்சிட்டு, அச்சிட்ட தாள்களைக் காப்புரிமை அலுவலகத்தில் ஒப்படைத்துப் பதிவு செய்தார். அச்சிட்ட படங்கள் நெடுநாட்களுக்குச் சேதமடையாமல் இருந்தன.

அதுமட்டுமல்ல, ஒன்பது பெரிய திரைப்படத் தயாரிப்புக் கம்பெனிகளை ஒருங்கிணைத்து, பேசும்படக் காப்புரிமை இயக்கத்தைத் துவக்கினார். அது எடிசன் டிரஸ்ட் என்று அழைக்கப்பட்டது.

நாம் தயாரிக்கும் பொருட்களின் உரிமையை நமக்கே தக்க வைத்துக் கொள்வதற்கு வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளையும் உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டும் என்பதை உணர்த்தும் வரலாற்று நிகழ்வுகள் இவை.

பேசும்படங்கள். கலைஞர்களின் நடிப்புத் திறனைச் சிதைத்துவிட்டன என்று கூறுவார் எடிசன். “நடிகர்கள் தங்கள் குரலிலும், வசன உச்சரிப்பிலும் அதிகக் கவனம் செலுத்தியதால் நடிப்பில் கோட்டை விட்டுவிட்டார்கள். இது உங்களை விட எனக்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால் எனக்குத்தான் காது கேட்காதே!” என்பார். காது கேட்காத இந்த விஞ்ஞானிதான் நம் செவிகளை இனிய பாடல்களால் இன்றும் குளிர வைக்கும் ஃபோனோகிராஃப் கருவியைக் கண்டுபிடித்தவர்.

### இயற்கை ரப்பர்:

1914-ல் முதல் உலகப் போர் மேகங்கள் சூழ்ந்தபோது, அமெரிக்க ராணுவத்தின் தொழில் நுட்பத்திறனை உயர்த்துவதற்காக ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. எடிசன் கப்பற்படை ஆலோசனைக் குழுவில் தலைமைப் பொறுப் பேற்றார். அவருடைய ஆலோசனைகள்படி கப்பற் படைக்காக பெரிய ஆய்வுக் கூடம் அமைக்கப் பயன்பட்டன. அந்த நேரத்தில் ராணுவ வாகனங்களின் உற்பத்திக்குத் தேவையான ரப்பருக்கு அமெரிக்கா வெளிநாடுகளை நம்பி இருந்தது. எடிசனுக்கும் அவருடைய நெருங்கிய நண்பரான ஹென்றி ஃபோர்டுக்கும் இது கவலை அளிப்பதாக இருந்தது. உடனே இருவரும் வாகன டயர் உற்பத்தியாளர் ஃபயர்ஸ்டோனுடன் சேர்ந்து உள்நாட்டிலேயே தங்களுக்குத் தேவையான ரப்பரைத் தயாரித்துக் கொள்வதற்கான மாற்று வழிகளைத் தேட ஆரம்பித்தனர்.

ஆளுக்கு $25000 முதலீடு செய்து ஃபோர்ட் மையெரில் (Fort Myer) 21 ஏக்கர் நிலப்பரப்பில் மரங்கள் அடர்ந்த தோட்டத்துடன் கூடிய ஆய்வுக் கூடம் அமைத்தார்கள். கிட்டத்தட்ட 17000 மரங்களிலிருந்து, மரப்பால் எடுத்துக் காயவைத்துத் தூளாக்கி ஆய்வுக் கூடத்தில் பரிசோதித்து ஒவ்வொரு மரப்பாலின் தன்மையையும் கண்டறிந்தார்கள். உழைப்பில் பெரும்பங்கு எடிசனுடையது. இறுதியில் கோல்டன்ராட் (Goldenrod) என்ற மரத்தின் பாலில் இருந்து இயற்கை ரப்பர் தயாரிக்கலாம் என்று எடிசன் கண்டறிந்தார்.

34 அடி உயரமுள்ள 5% பால் அளவுடன் கூடிய அந்தச் செடியைக் கலப்பு இனப்பெருக்கம் (Cross-breeding) செய்து 8 அடி உயரச் செடியாக வளர்த்து அதில் 12% மரப்பாலை இறக்கினார். ஆனால் அதில் தொடர்ந்து ஆய்வுகள் நடத்தி மேம்படுத்திய இயற்கை ரப்பரைத் தயாரிக்கும் முயற்சியில் இருந்தபோது உடல் நலம் குன்றினார். ஹென்றி ஃபோர்டும் ஃபயர்ஸ்டோனும் செயற்கை ரப்பரே பொருத்தமாகவும், சிக்கனமாகவும் இருப்பதாகவும் கண்டறிந்ததால் இயற்கை ரப்பருக்கான ஆய்வுகள் நின்றுபோயின.

எடிசனின் மறைவுக்குப்பின் தோட்டத்தைப் பராமரிக்கும் பொறுப்பை அமெரிக்க அரசின் தோட்டத்துறை ஏற்றுக் கொண்டது. இன்றும் ஆயிரமாயிரம் உல்லாசப் பயணிகள் எடிசனும் அவர் மனைவியும் வைத்த மரங்கள் வளர்ந்து நிற்பதைக் கண்டு மகிழ்கிறார்கள். (தொடரும்.)


HASINI
HASINI CONSTRUCTION
Licence Contractor
No.2, Vignesh Complex, Ariyalur - 621 704.
Email: hasiniconstruction1@gmail.com
MAN POWER SUPPLY ALL
(SKILLED & UN SKILLED)
CONSTRUCTION, PLANT O&M (RO,STP)
Contact
Ln.C.Prabhakaran B.Sc.,
99425 72111
97511 92696

# சந்தா படிவம்

திரு/திருமதி.......................................................................................................................................................

முகவரி...............................................................................................................................................................

..........................................................................................................................................................................

கோவில்.............................................பிரிவு..............................சொந்த ஊர்.......................................

கைபேசி........................ தொலைபேசி............................ ▸▸ இமெயில் ....................................................

▸▸ புதிய சந்தா ☐ / சந்தா புதுப்பித்தல் ☐ / Ref No.............................................................

செலுத்திய சந்தா ரூபாய் ஓராண்டு 250/- இரண்டு ஆண்டு - 500/ ஐந்து ஆண்டு -1250/ ☐ மணியார்டர்

☐ காசோலை ☐ RTGS ☐ GOOGLE PAY மூலம் செலுத்தி விவரம் தெரிவிக்கவும்.

வங்கி............................................................./ எண்................................/ நாள்........................

அனுப்ப வேண்டிய முகவரி: “நமது செட்டிநாடு” (மாத இதழ்), ராணி சீதை அரங்கம், 3வது தளம், 603, அண்ணா சாலை, சென்னை - 600 006.

வெளிநாடு சந்தா விவரம்: சிங்கப்பூர், மலேசியா ஆண்டிற்கு SG $ 40/ – பிற நாடுகள் ஆண்டிற்கு US $50/ –

## Cheque to be drawn in favour of

| | | |
|---|---|---|
| Chettinad Print Media P Ltd,<br>A/C No: .6412480441<br>Indian Bank, Thousand Lights Branch,<br>Chennai - 600 006. IFSC : IDIB000T020, | Or | Chettinad Print Media P Ltd.<br>A/C No:57500000199320<br>HDFC Bank, R.K.Salai Branch,<br>Chennai - 600 004, IFSC : HDFC0001097 |

டிடி/காசோலை அனுப்ப அஞ்சல் துறையின் துரித அஞ்சல் (Speed Post) சேவையைப் பயன்படுத்துங்கள்

Mobile : 98431 18372, 97888 57916 SKC E-mail : ocvcraj@gmail.com

SRI KRISHNA CONSTRUCTION

Undertaking all Kinds of Fabrication, Erection & Labour Suppliers

72 E, Periyar Nagar, Puliyur (Post), Karur - 639114.

...Specialist in...

Pipe line Ductings Structurals Fabrication

Erection and Comseling

Operation and Maintenance in Cement Plant

Paper and Chemical Plants

Namadhu Chettinad Published and Printed by N.Avadaiappan on behalf of M/S Chettinad Print Media (P) Ltd., Printed at DOT LINE DATA, New No.3, Old No.2, 21st Avenue, Ashok Nagar, Chennai - 600 083 and Published from Chettinad Print Media (P) Ltd., Rani Seethai Hall Building, 603, Anna Salai, Chennai - 600 006. Editor : N.Avadaiappan


Hospital & Research Institute
Chettinad Academy
of Research and Education
(Deemed to be University)
SUBSIDIZED SURGERY SCHEME @ CHRI
Smt. GEETHA MUTHIAH
SUBSIDIZED SURGERY SCHEME
Treatment for the need
10184
BENEFITTED SO FAR
Chettinad Hospital and Research Institute - "A" Block
Chettinad Health City, Rajiv Gandhi Salai, (OMR, Chennai),
Kelambakkam - 603 103, Chengalpattu Dist., Tamil Nadu, India.
T +91 (0)44 4741 1000 I W www.care.edu.in
For Details Contact :
Ms. VETRISELVI
+91 95512 97000

Namadhu Chettinad Tamil Monthly Regd. as Newspaper with RNI No.TNTAM / 2015 / 63956 Postal Registration No.TN/CC(S)DN/541/19-21
Licensed to post without prepayment under WPP No.TN/PMG (CCR)/WPP 542/19-21 and published on first week of every month.


நலமோடு
வாழ
நல்ல இடம்

# செட்டிநாடு கார்டன்

(அரசு அங்கீகாரம் பெற்ற குடியிருப்பு மனைகள்)

வளமோடு
வாழ
வசதியான இடம்


**குமாரமங்கலம், திருச்சி– 620021**

திருச்சி மாநகரத்தில் சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் தஞ்சை – நாகபட்டினம் – புதுக்கோட்டை –ராமேஸ்வரம் – மதுரை – கன்னியாகுமரி – திண்டுக்கல் – பழனி – கரூர் – கோவை தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கும் சுற்று வட்ட சாலையில் சுமார் 33 ஏக்கரில் 10 அடி உயரம் கொண்ட தரமான சுற்றுசுவர் அமைக்கப்பட்டு உயர்தரமான தார் சாலைகள் போடப்பட்டு சிறந்த சுற்றுச்சூழலில் 397 மனைகள், கடைகள் பள்ளி, மருத்துவமனை, சமுதாயக்கூடம், வணிக வளாகம் எனத் தனித்தனியே இடங்கள் ஒதுக்கப்பட்டு பூங்காக்கள், சிறுவர் விளையாட்டுத்திடல் உள்ளிட்ட வசதிகள் கொண்ட செட்டிநாடு கார்டன் குடியிருப்பு மனைகளில் முதலீடு செய்ய முந்துங்கள்.

- 5 கி.மீ. சுற்றளவுக்குள் 12 சிறந்த பள்ளிகள்
- 7 கி.மீ. சுற்றளவுக்குள் 10 கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள்
- கே.கே.நகர் 4 கி.மீ.
- திருச்சி சர்வதேச விமான நிலையம் 5 கி.மீ.
- திருச்சி மத்திய பேருந்து நிலையம் / இரயில் நிலையம் – 9 கி.மீ.

APPROVED DTCP LP / DTCP NO : 46 / 2008






## பதிவு மற்றும் விவரங்களுக்கு 98412 04000

பதிவு அலுவலகம்: ராணி சீதை அரங்கம், 6 வது மாடி, 603, அண்ணா சாலை, சென்னை – 600006 www.chettinadgarden.com




ISSN 2454-9649 